# களத்தில்

தமிழீழ மண்ணில் ஆயுதப் புரட்சி இயக்கத்திற்கு அத்திவாரமிட்டவர்கள் நாம். தமிழனின் வீர மரபைச் சித்தரிக்கும் சின்னமாக உதித்த எமது இயக்கம், வீர வரலாறு படைக்கும் புரட்சிகர விடுதலைச் சக்தியாக விரிவடைந்து வளர்ந்திருக்கிறது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (07.05. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (134) அன்பளிப்பு: 60 p


## 21வது ஆண்டினை நிறைவு செய்யும் தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த 05.05.1997இல் தனது 21வது ஆண்டினை நிறைவு செய்துள்ளது. **'புதிய தமிழ்ப் புலிகள்'** என்ற பெயருடன் 1972இல் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமானது, 05.05.1976இல் இருந்து **'தமிழீழ விடுதலைப் புலிகள்'** என்ற புதிய பெயருடன் செயற்படத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளின் வெளிப்பாடாக ஒரு சில அங்கத்தவர்களுடன் தோற்றம் கண்ட விடுத்லைப் புலிகள் இயக்கமானது, சிங்கள - பௌத்த இனவாத அடக்குமுறைக்கு எதிராகப் போராடி வரும் தமிழரின் தேசிய விடுதலை இயக்கமாக - தமிழர் தேசிய படையாக வளர்ச்சி கண்டுள்ளதுடன் தமிழர்களின் அரசியல் இலட்சியத்துடனும் வலுப்பெற்று நிற்கின்றது. ◆

## தங்கள் வெற்றிக்கு எமது வாழ்த்துக்கள்

- தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்

"தேர்தலில் தங்கள் கட்சி பெற்ற அமோக வெற்றியுடன் பிரதமராகப் பதவி ஏற்றிருக்கும் தங்களுக்கும் தங்கள் கட்சிக்கும் எமது உளப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்"

இவ்வாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள், பிரித்தானியாவின் புதிய பிரதமர் ரோனி பிளையர் அவர்கட்கு கடித மூலம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**வாழ்த்துச் செய்தியின் முழு விபரமும் உள்ளே....**



புதிய பிரதமர் ரோனி பிளேயர்

# வன்னிப் பகுதியை தாக்க சிறிலங்கா படைகள் முயற்சி

சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு, வன்னிப் பகுதி மீதான ஓர் கடும் தாக்குதலுக்கான முயற்சிகளில் இறங்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

என்றும் இல்லாத அளவுக்கு ஆளணிகளும் இராணுவத் தளபாடங்களும் வவுனியாவில் குவிக்கப்பட்டு வருவதாகவும், சிறிலங்காப் படையணிகள் வவுனியாவிலுள்ள இராணுவ முகாம்களின் முன்னரங்கப் பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டு வருவதாகவும் பொதுமக்களின் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு சர்வதேசச் செய்தி நிறுவனமான ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவின் நீண்டகாலத் திட்டத்தில் ஒன்றான வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தரைப் பாதையைத் திறத்தல் என்ற போர்வையிலேயே இந்தப் பாரிய போர் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகக் கருதும் ஆய்வாளர்கள், இத்தகைய

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## "சவாலை உறுதியுடன் எதிர்கொள்ளும் தமிழ் மாணவர் சமுதாயம்"

-தமிழீழத் தேசியத் தலைவர் பாராட்டு

''கல்வித்துறையில் எழுந்த பெரும்சவாலை இன்று தமிழ் மாணவர் சமுதாயம் உறுதியுடன் எதிர்கொள்கின்றது.'' இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வுப் போட்டியில், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களை வாழ்த்தி விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார். போர் நடவடிக்கைகளும் பொருண்மிய நெருக்கடிகளுமாக கல்வித்துறைக்கு எழுந்த பெரும் சவாலை எத்தனையோ இடர்பாடுகள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கல்வியைச் சீராகக் கற்பதென மாணவர் சமூகம் உறுதி பூண்டிருக்கின்றதென தலைவர் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.



மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, கடந்த மாதம் 19ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி மத்திய கல்லூரியில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மருதம் தலைமையில் இடம் பெற்றது. விழாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், மற்றும் பெற்றோர்கள், பொது மக்கள், மாணவர்கள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். விழா மேடையில் தலைவரின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. ✷

உள்ளே... ☞


- ❆ சிறுகதை - நான் நலம்....
- ❆ உலக அரங்கு பிரித்தானியா - தேர்தல் விபரம்
- ❆ கனடா (நீதிமன்ற) வழக்கு....
- ❆ சர்வதேச அரங்கில் தமிழீழ...
- ❆ தாயகம் நோக்கிய......
- ❆ தமிழீழச் செய்திகள்...
- ❆ மக்கள் பணியில் த.பு.க. (TRO)
- ❆ த.பொ.மே.க. (TEEDOR).


**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# புயலிசை கானங்கள்

தமிழகத்தில் பிறந்து தமிழீழ விடுதலையை நேசித்து
தமிழீழ விடுதலை கீதங்களையே இசைத்துவரும்

## தேனிசை செல்லப்பா

சுவிசின் 5 பிரதான நகரங்களில் ....

**BASEL,**
**10.05.97** சனி 6.30 மணி
**STADT CASINO**
**STEINENBERG 14, BASEL**

**BERN,**
**11.05.97** ஞாயிறு 6.30 மணி
**REST. DON - KAMILLA**
**ZIEGLERSTR. 20, BERN**

**LUZERN,**
**16.05.97**
வெள்ளி 6.30 மணி

**LAUSANNE,**
**17.05.97** சனி 6.30 மணி
**SALLE - DE VILLAMONT**
**AV. DE VILLAMONT 13**
**LAUSANNE.**

**ZURICH,**
**18.05.97** ஞாயிறு 6.30 மணி
**REST. SALMEN**
**ULIKONERSTR. 17. SCHLIEREN**

## அனைவரும் திரண்டு வருக

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)


# மட்டக்களப்பு கும்புறுமுனையில் அதிரடி
# 23 இராணுவத்தினர் பலி - கவச வாகனம் சிதறடிப்பு

கடந்த மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் கும்புறுமுனை இராணுவ முகாமிலிருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ அணியொன்று விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது. சுமார் பத்து நிமிடங்களே நீடித்த இவ் அதிரடியில் 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் போக எனைய சிங்களப் படையினர் காயங்களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டனர். இவ் வெற்றிகரமான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். சிவராஜ் (சண்முகராஜ் சுரேஸ், மட்டக்களப்பு), 2ஆம் லெப். கவிதாகரன் (பரந்தாமன் சிவகுமார், மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகள் வீரச் சாவடைந்துள்ளனர். இத் தாக்குதலில் பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலையடுத்து, துங்காய்க்கேணியிலிருந்து வந்து வாழைச்சேனையில் விடுதலைப் புலிகளின் அணி நின்றவேளை, முற்பகல் 11 மணியளவில் கும்புறுமுனை இராணுவ முகாமிலிருந்தும் கல்மடு இராணுவ முகாமிலிருந்தும், வாழைச்சேனை காகித ஆலை மண்ணிலிருந்து எதிரிப் இராணுவ முகாமிலிருந்தும் புறப்பட்ட சிறிலங்காப் படையினர் விடுதலைப் புலிகளைச் சுற்றிவளைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதேவேளை வாழைச்சேனை காகிதஆலை முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலையும் நடாத்தினர். மதியம் 12.30 மணிக்கு ஆரம்பித்த தாக்குதல், மாலை 6.30 மணிவரை தொடர்ந்தது. சுற்றிவளைக்க முனைந்த கவச வாகன அணியினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும்சண்டை நடைபெற்றது. சிறிலங்காப் படையினரின 'சலாடின்' கவசவாகனம் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலால் முற்றாக சிதறடிக்கப்பட்டது. இச் சண்டையின்போது இராணுவத்தின் இழப்பு அறியப்படவில்லை. கவசவாகனம் சிதறடிக் கப்பட்டதையடுத்து கவசவான அணியினர் பின்வாங்கிச் சென்றனர்.

தமிழ் – சிங்களப் புத்தாண்டு பிறந்ததின் பின் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரிய தாக்குதலாக சர்வதேசச் செய்தித் தாபனங்களால் வர்ணிக்கப்படும் இத் தாக்குதலின்போது, மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தாயக படைகளை விரட்டியடிக்கும் புனிதப் போரில் தம்மை ஆகுதியாக்கிய இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்.

இதேவேளை, 25.04.97 அன்றும் மட்டக்களப்பு கொட்டடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட ஓர் இராணுவ அணி முகாமிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் வைத்து காத்திருந்த விடுதலைப் புலி வீரர்களால் தாக்குதலுக்கு உள்ளானது. இதன்போது நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை. ◆

# மனைவியைக் காப்பாற்ற முனைந்த கணவன் கைது
## வடமராட்சியில் சம்பவம்

மதுபோதையில் வந்த சிறிலங்காப் பொலிசார் ஒரு குடும்பப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முனைந்தவேளை, அதைத் தடுத்து நிறுத்த பொலிசாரைத் தாக்கிய அவரது கணவர், பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளார். பருத்தித்துறை கார்த்திகா உணவகத்தில், கடந்த மாதம் 14ஆம் திகதி இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மேற்படி உணவகத்திற்கு மதுபோதையில் வந்த பொலிசார், உணவக உரிமையாளரின் மனைவியைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்த முனைந்தவேளை, அவ்விடம் விரைந்த உரிமையாளர் சிறீ, தனது மனைவியைக் காப்பாற்ற பொலிசாரைத் தாக்கினார். பின்னர் அவரைத் திருப்பித் தாக்கிய பொலிசார் அவரை தமது முகாமுக்கு கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் 17ஆம் திகதி பருத்தித்துறைப் பகுதியில் சுற்றிவளைப்பை நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் ஆசிரியர் ஒருவரை எவ்வித காரணமும் இல்லாமல் கைது செய்துள்ளனர். கடுமையாக அவ் ஆசிரியரைத் தாக்கிய இராணுவத்தினர் நடக்க முடியாத நிலையில் இருந்த அவரைக் கயிற்றால் கட்டி இழுத்துச் சென்றுள்ளனர். இவரது நிலை என்னவென்று அறியப்படவில்லை. ◆

# பாடசாலை மாணவர் தலைவன் இராணுவத்தால் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டையில் பாடசாலையொன்றின் மாணவர் தலைவன் சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார். 16 வயதுடைய கணபதிப்பிள்ளை பிரதீபன் என்ற மாணவன் கடந்த மாதம் 8ஆம் திகதி, ஆனைக் கோட்டைப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அம் மாணவனைச் சுட்டுக் கொன்ற சிங்களப் படையினர், அம் மாணவனின் உயிரற்ற சடலத்தின் கைகளில் கைக் குண்டுகளை வைத்து புகைப்படம் எடுத்துள்ளனர். வேண்டுமென்றே இம் மாணவனைக் கொன்றுவிட்டு, கைக்குண்டுடன் வந்த பயங்கரவாதியைச் சுட்டு விட்டதாகவும் ஒரு கைக்குண்டு மீட்கப்பட்டதாகவும் சந்திரிகா அரசின் பிரச்சார ஊதுகுழல்களான வானொலியும் தொலைக்காட்சியும் அப்பட்டமான பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டன என்பது குறிப்பிடத் தக்கது. ◆

# அடிமைச் சாசனத்தின் வெள்ளிவிழா

**1972** வைகாசி 22ஆம் நாள், இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முன்பிருந்தே வாழ்ந்துவரும் தமிழினத்திற்கு வரலாற்றின் துயரமான நாள். அன்றுதான் இலங்கைத் தீவின் தமிழ் மக்கள் நாடற்ற தேச இனமாக்கப்பட்டனர். அன்றுதான் காலனித்துவம் வழங்கிய ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையைப் பயன்படுத்தி சிங்களப் பேரினவாத அரசு, "சிறிலங்கா குடியரசு" எனும் தன்னிச்சையான சிங்கள – பௌத்த குடியரசைப் பிரகடனப்படுத்தியது. சிங்கள–பௌத்த பேரினவாதத்தின் தந்தை பண்டாரநாயக்கா, 1956இல் "சிங்களம் மட்டும்" சட்டத்தைக் கொண்டு வந்து 1952இல் ஜே.ஆர். கண்ட கனவை நனவாக்க பேரினவாதத்தின் தாயார் சிறிமாவோ 1972இல் சிங்கள – பௌத்த குடியரசைப் பிரகடனப்படுத்தி தமிழீழ மக்களினை நாடற்ற தேச இனமாக மாற்றினார்.

அதுமட்டுமல்ல, இன்று மகள் சந்திரிகா சமாதான நாடகமாடி படைபலப் பிரயோகம் கொண்டு தமிழர்களை அடிமைப்படுத்த முயல்வது போலவே, அன்று தாயார் சிறிமாவோவும் பொலிசாரை பிரகடனப்படுத்தாத இராணுவமாக மாற்றி "பாதுகாப்பு" என்ற போர்வையில் தமிழர்களை அடிமையாக்க முயன்றார். இந்தக் கொடுமையான அரசியலமைப்புக்கு ஜனநாயகரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்க முயன்ற தமிழர்கள் விசாரணையற்ற கைதிகளாக்கப்பட்டனர் அல்லது நேரடியாகவும் மறைமுகமாகவும் படைகளினால் வதைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வந்தனர். இவ்வாறாக, 1972ஆம் ஆண்டு வைகாசி 22 முதல் தமிழர்கள் சட்டரீதியாக மட்டுமல்ல, ஆயுதரீதியாகவும் அடிமைப்படுத்தப்பட்டனர். இன்னொரு விதமாகச் சொன்னால், பேரினவாத அரசியலமைப்பு ஒன்று திணிக்கப்பட, ஆயுத அமைப்பு ஒன்று அதனை அமுலாக்குவதற்கு உருவாக்கப்பட்டது. முதலாவது செயற்பாட்டின் மூலம் தன்னை தமிழர்களின் அந்நிய அரசாக மாற்றிக்கொண்ட சிறிலங்கா, இரண்டாவது செயற்பாட்டின் மூலம் தன்னை ஆக்கிரமிப்பாளனாகவும் ஆக்கிக்கொண்டது.

இந்த அரசியலமைப்பு, இன்று நூற்றாண்டு விழாக் காணும் தந்தை செல்வநாயகத்தினால் சட்டரீதியாக நிராகரிக்கப்பட்டு 1975 காங்கேசன்துறை பொதுத் தேர்தல் மூலம் மக்கள் விருப்பாக வெளிப்படுத்தப்பட்டது. பின் அது, சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனமாக அறிவிக்கப்பட்டு, அதன் வழியாக "தமிழீழத்தை மீள நிறுவுதல்" என்பது 1976 வட்டுக்கோட்டை தீர்மானத்தால் முன்மொழியப்பட்டு, 1977 தேர்தலை தமிழ் மக்களின் குடியொப்பமாக மாற்றி உறுதி செய்யப்பட்டது.

அதன் பின்னர், இலங்கைத் தீவில் 1972இல் நாடற்ற தேச இனமாக்கப்பட்ட தமிழ் மக்கள், தங்களது அரசாக தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கும் வழியாக "தமிழீழ அரசை" வெளிப்படுத்தினர்.

தமிழ் மக்களின் சர்வதேச சட்டங்களுக்கு இயைபான சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்தை ஆயுதப் படைபலம் கொண்டு ஒடுக்க முனைந்த சிறிலங்கா அரசு, இதனை எதிர்த்த அப்பாவித் தமிழர்களை காரணமின்றிக் கைதாக்கி, விசாரணையின்றி அடைத்து வைத்தது. நடைமுறையில், பொலிசார் இராணுவத்தின் அனைத்து நடைமுறைகளிலும் செயற்படுத்தப்பட்டனர். 1974இல் தமிழர்களின் கல்வி, பண்பாட்டு உரிமைகளின் அப்பட்டமான வன்முறையாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் ஆயுதப் படையினரால் குழப்பப்பட்டு அப்பாவித் தமிழர்கள் 9 பேரின் உயிர் பறிக்கப்பட்டது.

இவ்வாறு, நாளும் பொழுதும் தமிழ் மக்கள் ஒடுக்குமுறைகள், சட்டவாக்கங்கள் மூலம் நியாயப்படுத்தப்பட்டு நீதித்துறை சுதந்திரமும் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டது. கல்வி, பண்பாட்டு, மத உரிமைகள், தொழில் செய்யும் உரிமை, சுதந்திரமாக ஒன்றுகூடும் உரிமை, ஜனநாயக அரசில் பங்குபற்றும் உரிமை என ஒவ்வொரு உரிமையாக ஆயுதமுனையில் மறுக்கப்பட்டு இறுதியில் தெளிவான முறையில் தமிழ் மக்களின் வாழும் உரிமையும் வன்முறைப்படுத்தப்பட்டது.

இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போராடி வருகின்றது.

இந்த மக்கள் அமைப்பின் தேவை உணரப்பட்டு தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதன்மூலமே சிறிலங்கா அரசு ஏற்படுத்திவரும் ஆயுத அடக்குமுறைகளை ஒழிக்க முடியும்.

இன்று 1972இல் தொடங்கப்பட்ட ஆக்கிரமிப்பின் உச்சக்கட்டமாக, தமிழீழ மக்கள் அனைவரதும் பாரம்பரிய புகழ்மிக்க யாழ்ப்பாண நகரமும் குடாநாடும் போரின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவ ஆக்கிரமிப்பு விலக்கப்பட வேண்டும் எனும் நெருக்கம் சர்வதேசத்தால் அழுத்திக் கூறப்படும்வரை "அமைதிப் பேச்சு" என்பது நடைமுறைச் சாத்தியமாகாது. இராணுவ பலத்தால் எதையும் திணிக்கலாம் எனும் ஆக்கிரமிப்பு உணர்வு உள்ளவரை எதையும் பேசித் தீர்க்கலாம் என்ற நினைவே எழாது. இதுவே யதார்த்தமாகும். ஆகவே தமிழீழ மக்கள் மீது அடிமைச் சாசனம் எழுதப்பட்ட இந்த வெள்ளிவிழா ஆண்டிலாவது, இந்த அடிமைச் சாசனம் எவ்விதம் ஆக்கிரமிப்புப் படையாக மாற்றப்பட்டு தமிழீழ மக்களை சிறிலங்கா இனக்கொலை, இனஅழிப்பு, மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் என்பனவற்றால் பகிரங்கமாக அழித்து வருகிறது என்பதை உணர்ந்து, இந்த அடிமைச் சாசனத்தை எதிர்த்துப் போராடும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து – படைகள் விலகலுக்கும் பாதுகாப்பான அமைதிக்கும் சர்வதேச உலகை வழிகாட்டச் செய்வது நமது கடமையாகும். ✷

# யாழ் புனரமைப்பு

**யாழ்** குடாநாட்டில் சேதத்துக்குள்ளான வீடுகள், கடைகள் புனரமைப்புக்கென அரசாங்கம் இதுவரை எந்தவித உதவிகளையும் வழங்கவில்லை. இந்த அறிவிப்பானது, விடுதலைப் புலிகளினதோ அன்றி அரசுக்கெதிரானவர்களினதோ அல்ல. சிறிலங்கா அரசாங்கத்தின் யாழ் மாவட்ட ஏஜெண்டின் கூற்றுக்களாகும். ஒரு வகையில், இதனை அரச தரப்பு ஒப்புதல் வாக்குமூலம் என்றுகூடக் கூறலாம்.

"ரிவிரச-1" இராணுவ நடவடிக்கை 1995 இறுதியில் முடிவடைந்தபோது யாழ். மாவட்ட அபிவிருத்திக் கல்வி பற்றியும் புனரமைப்பு பற்றியும் அரசாங்கம் பேச முற்பட்டது. சந்திரிகா அரசின் முதல் பணி, யாழ் மாவட்டத்தில் குறிப்பாக யாழ் நகரை மீளக் கட்டி எழுப்புவதாகும் எனவும் கூறப்பட்டது. இதே சமயம், அமைச்சர்கள் பலர் குடாநாட்டிற்கு விஜயங்களையும் மேற்கொண்டனர்.

அங்கு அபிவிருத்தி, புனரமைப்புப் பணிகள் பற்றி நிறையவே பேசினர். இதற்குக் கொடுக்கப்பட்ட பிரச்சாரம் முக்கியமானது. அபிவிருத்திப்பணிகளை எவருமே தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது போன்றும் இருந்தது.

ஆனால், யாழ் குடாநாட்டிற்குச் சென்ற அமைச்சர்கள், அதிகாரிகளின் அபிவிருத்திப் பணியானது யுத்தத்தினால் சேதமுறாமல் இருந்த வீடுகளில் காரியாலயங்களையும் கடைகளையும் திறந்து வைப்பதாகவே இருந்தது. இதற்கு அப்பால் அவர்களின் அபிவிருத்திப் பணி தொடர்ந்ததாக இல்லை. ஆனால், அமைச்சர்களின் அதிகாரிகளின் பேச்சுக்கள் கடந்த கால யுத்தத்தினால் அபிவிருத்தியின்றித் தங்கிவிட்ட யாழ் குடாநாடு விரைவில் தென்னிலங்கைக்குச் சமமான வளர்ச்சியைப் பெற்றுவிடும் என்று இருந்தது.

ஆனால், அமைச்சர்களின் பேச்சுக்கள், வாக்குறுதிகள் படிப்படியாக சுருதி இறங்கிச் செல்ல அவர்களின் பணி தமிழ்க் குழுக்களிடம் குறிப்பாக ஈ.பி.டி.பியினரிடம் கொடுக்கப்பட்டது. இதன் பிரகாரம், வடபகுதி அபிவிருத்திப் பணிகளுக்குத் தலைவராக ஈ.பி.டி.பி குழுத்தலைவர் டக்லஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டார். அவரின் மேற்பார்வையில்

தொடர்ச்சி 14 ம் பக்கம்....

# சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகள் ஏட்டில் இருந்து

''**பி**ரித்தானிய அரசின் மத்தியஸ்தத்துடன் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் இரகசியப் பேச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டதாகச் சில செய்தி நிறுவனங்கள் ஒரு யூகத்தைப் பரப்பியுள்ளன. இந்த யூகத்தில் எந்த உண்மையும் இல்லை. அதேவேளை, அத்தகைய தொரு சமாதானப் பேச்சுக்கான எந்தவொரு சமிக்ஞைகளையும் புலிகளை நோக்கி சந்திரிகா அரசு விடுக்கவும் இல்லை'' இவ்வாறு, விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் இதழில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ''புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்குத் தயாராகவே இருக்கின்றது. இராணுவ அழுத்தங்கள் எதுவும் இன்றி ஒரு இயல்பு நிலை தோன்றிய சமரசச் சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே புலிகளின் நிலைப் பாடாகும். அதற்காக, சர்வதேச மத்தியஸ்தத்தையும் புலிகள் இயக்கம் கோரியுள்ளது. ஆனால், சந்திரிகா அரசாங்கமானது, புலிகளுடனான சமாதான பேச்சுக்களையும், பேச்சுக்கான சர்வதேச மத்தியஸ்தத்தையும் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது. அண்மையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தத் தூதுவராகச் செயற்பட பாலஸ்தீனத் தலைவர் யாசர் அரபாத் முன்வர, அரபாத்தை அரசு பகிரங்கமாகவே நிராகரித்து விட்டது. புலிகளுடன் பேச மறுப்பதற்கும், சர்வதேச மத்தியஸ்தத்தை நிராகரிப்பதற்கும் ஆழமான காரணங்கள் உண்டு. தமிழினத்தின் தேசிய தனித்துவத்தையும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் புலிகள் இயக்கம் காக்க முயல்கின்றது என்பது அரசுக்கு நன்கு தெரியும். உலகளாவிய ரீதியில் தேசிய இனத் தனித்துவங்களை சர்வதேச உலகம் ஏற்றுக்கொண்டது என்பதும் அரசுக்கு நன்கு தெரியும். எனவேதான், சர்வதேச மத்தியஸ்துவத்துடன் இன்று புலிகள் இயக்கத்துடன் அரசு

தொடர்ச்சி 14 ம் பக்கம்.

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.

உங்கள் ஆக்கங்களை 06 - 06 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
**Eelam House,**
**202Long Lane,**
**LondonSE1 4QB.**

களத்தில் ஆசிரியர் குழு



## உயிர்காக்கும் நிதியம் - நோர்வே தமிழர்களின் முன்மாதிரி

எமக்காக - எமது தேச விடுதலைக்காக - எம்மவர்களின் உயிர், உடல், உடமைகளைப் பாதுகாப்பதற்காக - தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் களமாடி விழுப்புண் அடையும் போராளிகளின் மருத்துவத் தேவைகளை கவனிப்பதற்காகவும் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துவதற்காகவும் "உயிர்காக்கும் நிதி" எனும் நிதி சேகரிப்புத் திட்டமொன்று வைகாசித் திங்கள் முதலாம் நாள் மாலை நோர்வே வாழ் தமிழர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இத் திட்டம் ஞாயிறு 4ஆம் திகதி மாலை வரை கால எல்லையுடன் 250க்கும் மேற்பட்ட தொண்டர்களினால் தொடரப்பட்டது.

நோர்வே தமிழ் மக்கள், இப் புனிதப் பணியில் ஈடுபட்ட தொண்டர்களை பேரார்வத்துடன் வரவேற்று, பெரும் நேசமுடன் தேசப் போராளிகளின் உயிர்காக்கும் நிதிக்கு பெருமளவில் தம்மாலான நிதி வளங்களை அளித்து தமது தேசக் கடமையினை நிறைவேற்றிக் கொண்டனர்.

நோர்வே தமிழ் மக்களின் இந்த அர்த்தமுள்ள அக்கறையுள்ள தேச அன்புச் செயற்திட்டம் பிறநாடுகளில் வாழும் தமிழர்களால் "முன்மாதிரி முயற்சி" என வெகுவாகப் பாராட்டப்பட்டு வருகிறது. ✷

## 4360 மில்லியன் ரூபா பெறுமதியான கடற்படைக் கப்பல்கள் விமானப்படை விமானங்கள் இழப்பு

சிறிலங்காப் படையினர் கடந்த இரண்டரை வருட காலத்தில் இழந்த இராணுவத்தினது எண்ணிக்கை, தான் பதவி வகித்த ஐந்து வருட காலத்திலும் இழந்ததைவிட அதிகம் என சிறிலங்காவின் முன்னாள் விமானப் படைத் தளபதி கரிகுணதிலக கூறியுள்ளார். 2860 மில்லியன் ரூபா பெறுமதியான விமானப்படைக் கலங்களையும் 1500 மில்லியன் ரூபா பெறுமதியான 27 கடற்கலங்களையும் சந்திரிகா அரசு இரண்டரை வருட காலத்தில் பறிகொடுத்துள்ளதெனவும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

மேலும், சிறிலங்கா இராணுவத்திற்கான செலவீனம் நூறுவீத அதிகரிப்பை இரண்டரை வருடத்தில் எய்தியுள்ளதென குறிப்பிட்ட அவர், விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல், சிறிலங்காவின் முழுச் சரித்திரத்திலும் என்றுமே இடம்பெறாதது. அது மட்டுமல்ல, உலகப் போருக்குப் பின்னர் தென்னாசியாவோ - தென்கிழக்காசியாவோ இப்படியான பெரும் திட்டமிட்ட தாக்குதலைக் கண்டதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். ✷

## செங்கலடியில் கைதான இரு இளைஞர்கள் எங்கே?

சித்திரை மாதம் 20ஆம் திகதி மட்டக்களப்பு செங்கலடி பாலத்தருகே வைத்து கைதான இரு இளைஞர்கள் க. சிவகுமார், க. ரவிச்சந்திரன் ஆகியோர் கொம்மாந்துறை இராணுவ முகாமுக்கு சிறிலங்காப் படையினரால் கொண்டு செல்லப்பட்டனர். இவ் இளைஞர்கள் கைதான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த இவர்களின் உறவினர்கள் கொம்மாந்துறை இராணுவ முகாமுக்குச் சென்று விசாரித்தபொழுது அவர்களைப் பற்றி தங்களுக்கு எதுவுமே தெரியாது என சிறிலங்கா இராணுவத்தின் அதிகாரிகள் கையை விரித்துள்ளனர். இதனால் கலக்கமும் ஆத்திரமும் அடைந்த இவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பு சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டதையடுத்து, வழமையின் பிரகாரம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு இவர்களின் நிலையைக் கண்டறிய உதவுமாறு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்ட இளைஞர்கள் "காணாமல் போனோர்" பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டார்களா? என்ற பீதியில் உறவினர்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளனர். ✷

## கும்புறுமுனையில் மூவரை காணவில்லை

மட்டக்களப்பு கும்புறுமுனைப் பகுதியில் கடந்த21ஆம் திகதி நடைபெற்ற சிறிலங்கா இராணுவச் சுற்றிவளைப்பின்போதும் 3 தமிழ் இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். அ.பாலன் (19), ம. சதீஸ்வரன் (16), ந. இன்பராசா (19) எனும் இளைஞர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

அம்பாறை திருக்கோவில் பகுதியில் பல பொதுமக்களைச் சுற்றி வளைத்த விசேட அதிரடிப் படையினர் அவர்களைக் கடுமையாக தாக்கியுள்ளனர். இவர்களில் பலரை மேல் விசாரணைக்கென அக்கரைபற்று அதிரடிப்படை முகாமிற்கும் கொண்டு சென்றுள்ளனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் ஓர் இளம் பெண்ணும் அடங்குகிறார். 19 வயதுடைய மயில்வாகனம் தர்மினி எனும் இப் பெண்ணில் குடும்பத்தினர் தங்கள் பிள்ளைக்கு என்ன ஆகுமோ என கலங்கியவண்ணம் உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ✷

## திருமலையில் 22 இராணுவத்தினர் பலி - தோப்பூரிலும் தாக்குதல்

கடந்த மாதம் 27ஆம் திகதியன்று திருகோணமலை புல்மோட்டையில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 22 சிறிலங்கா இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். 6 பேர் படுகாயங்களுடன் தப்பியதாக சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீட செய்திகளின்படி, திருகோணமலை புல்மோட்டை 10ஆம் கட்டையில் காலை 8.45 மணியளவில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 22க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும், தாக்குதலில் சிக்கிக் கொண்ட இராணுவத்தினருக்கு உதவ வந்த இராணுவ அணியும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் தப்பியோடி விட்டதாகவும் தெரிய வருகின்றது. இத் தாக்குதலில் 2 ஏ.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் உட்பட 60 மி.மீ. மோட்டார் குண்டுகள் மற்றும் பல ஆயுதங்களும் புலி வீரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது. இத் தாக்குதலின்போது 2ஆம் லெப். ராகுலன் (தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு, திருமலை), 2ஆம் லெப். இயல்வேந்தன் (தர்மராசா ரவீந்திரன். திருமலை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தமிழ-சிங்கள புத்தாண்டு பிறந்ததின் பின்னர் விடுதலைப் புலிகள் நடாத்திய இரண்டாவது பெரிய தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

புல்மோட்டையில் நடைபெற்ற இத் தாக்குதல் அதிர்ச்சியில் இருந்து இராணுவத்தினர் மீள்வதற்கிடையில், மூதூரில் தோப்பூர் எனும் இடத்தில் சிறிலங்காப் பொலிசாரின் சோதனைச் சாவடி ஒன்றும் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. ஆறு சிறிலங்காப் பொலிசார் இத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் லெப். நிதி (இன்பராசா ஜெயப்பிரகாசம், உருத்திரபுரம், கிளிநொச்சி) எனும் போராளி வீரச்சாவடைந்துள்ளார். தாயக மண் மீட்பில் விதையாகி வீழ்ந்துவிட்ட இம் மாவீரர்களுக்கு எமது வீர வணக்கங்கள். ✷

## வன்னிப் பகுதியை தாக்க ......

எவ்வித நடவடிக்கையும் என்றுமில்லாத மோசமான பாதிப்பை மக்களுக்கு ஏற்படுத்தக்கூடும் எனவும் அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை எதிர்நோக்கி வன்னியில் வாழும் தமிழ் மக்கள் திட்டமிடப்படும் இராணுவ நடவடிக்கைகளால் மேலும் மோசமான வாழ்வுக்குள் தள்ளப்படக்கூடும் எனப் பத்திரிகையாளர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் சுட்டிக்காட்டி சிறிலங்கா அரசை எச்சரித்தும் வருகின்றன. ஆனால் சிறிலங்கா அரசோ, தமிழ் மக்களின் உயிர் - உடல் - உடமைகளையோ மனோ நிலைப் பாதிப்புக்களையோ பற்றி எவ்வித அக்கறையும் இன்றி தனது ஆதிக்கவெறியையும் இராணுவ வல்லாண்மையையும் கொண்டு இத் திட்டத்தை பூர்த்தி செய்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது.

இம்முறை சிறிலங்கா பெரும் வான்வழித் தாக்குதல்களுக்கே திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கும் அரசியல் - இராணுவ ஆய்வாளர்கள், சிறிலங்கா அனுபவிக்கும் வான்வழி இழப்புக்களையும் சுட்டிக்காட்ட மறக்கவில்லை. இத்தகைய முட்டாள்தனமான தாக்குதல்களால் சிறிலங்காவின் இராணுவ - அரச வளங்கள்தான் வீணாக்கப்படும் என்பதற்கு அண்மையில் முன்னாள் சிறிலங்கா விமானப் படைத் தளபதி கூறிய கூற்றுக்களைக் குறிப்பிடலாம்.

'எடிபல' எனக் குறிப்பிடப்பட்ட இராணுவ நடவடிக்கையால் இராணுவ - அரச வளங்கள் வீணடிக்கப்பட்டுள்ளன" எனச் சுட்டிக்காட்டிய அவர், ஒரு வீதியைக் கைப்பற்றும் நாடகமாக அதனை வர்ணித்துள்ளார்.

"ஒரு வீதியைக் கைப்பற்றுவதற்காகப் பெரும் வளங்கள் வீணடிக்கப்பட்டுள்ளன. அவ் வீதியைப் பாதுகாப்பதற்குப் படையினரது உயிர்களே பணயம் வைக்கப்படுகின்றன. வன்னிக்குப் பின்வாங்கி நிதானமாக இவற்றை அவதானித்துவரும் விடுதலைப் புலிகள், கிழக்கில் வெற்றிகரமாகச் செய்ததுபோல் முன்னணிப் பாதுகாப்பு அரண்களை உடைத்து உட்புகவே முயற்சிப்பார்கள். இவ்வாறான செய்திகளை சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ எதிர்பார்க்கலாம். சிறிலங்கா அரசின் அண்மைக்கால இராணுவ நகர்வுகள் அரசியல் லாபம் கருதி மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## குற்றமற்றவர்களென விடுவிக்கப்பட்டவர்களை சிறிலங்காவிற்கு கொண்டுசெல்ல சிறிலங்கா அரசு முயற்சி

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு சென்ற கப்பலில் சென்று இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட கப்பல் பணியாளர்கள் ஒன்பது பேர்களையும் குற்றமற்றவர்கள் எனக்கூறி இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. இந்தியாவில் நாசவேலை செய்வதற்காக வந்ததாக அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில், அவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளித்து விடுவிக்கப்பட்டனர். காவல்துறையால் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டபோதும், அவர்களின் தண்டனைக் காலம் முடிவடைந்ததாகக் கூறி அவர்களை விடுவித்து அவர்கள் புறப்பட்டு வந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு உச்சநீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருந்தார். எனினும், நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்து, அவர்களை சிறிலங்காவிற்குக் கொண்டு செல்ல சிறிலங்கா அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சிறிலங்காத் தூதரகம், இவர்களை தமது நாட்டிற்கு அனுப்ப வேண்டும் என வற்புறுத்துவதாக, காவல்துறை சார்பில் மாவட்ட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி, 9 பேரும் விரும்பாத நிலையில் அவர்களை இலங்கைக்கு அனுப்பினால், அவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும் பொறுப்பைக் காவல்துறையினர் ஏற்றுக் கொள்வார்களா எனக் கேள்வி எழுப்பியதுடன், அவர்கள் எங்கிருந்து புறப்பட்டு வந்தார்களோ அந்த நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

### மன்னாரில் 80 ஆயிரம் மக்கள் பட்டினி நிலையில்

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மன்னார் பகுதிக்கு உணவு வழியோகத்தை சிறிலங்கா இராணுவம் தடுத்துள்ளத. இதனால் 80 ஆயிரம் மக்கள் பட்டினி நிலையை எதிர்நோக்குவதாகவும் உடன் உணவு அனுப்பும்படியும் கோரி இரண்டாவது தடவையாக மன்னார் சிறிலங்கா அரச அதிபர் கொழும்புக்கு நேரடியாகச் சென்றுள்ளார். ஆயினும், இதற்கு தம்மால் எதுவுமே செய்ய முடியாது எனவும் மேலிடத்து உத்தரவு எனவும் கொழும்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ✷

# சர்வதேச அரங்கில்

**1995**ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி மூன்றாம் கட்ட ஈழப்போர் வெடித்த போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச ரீதியில் வென்றெடுப்பதற்கான கடுமையான போராட்டம் ஒன்றும் ஆரம்பமானது. சர்வ தேசத்தில் பனிப்போரின் பின் நிலவும் நவீன கால சூழ் நிலைகளைச் சிறிது நோக்கின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசப் பரிமாணத்தினை விளங்கிக் கொள்ளல் இலகுவாக இருக்கும்.



முதலாங் கட்ட பேச்சுவார்த்தையின் போது........

பனிப்போரின் முடிவில் உலகின் ஏக வல்லரசாக அமெரிக்கா உருவெடுத்தபோதும் நாடுகளுக்கிடையிலான போட்டிகள் வர்த்தகத்தை முதன்மையாகக் கொண்டே உருவெடுக்கத் தொடங்கின. ஐக்கிய நாடுகள் சபை தேச அரசுகளின் கழகமாக (club of Nation states) உருவெடுத்தது. சனநாயகம் முழுமையடையாமையினால் உலகின் பல்வேறு மூலைகளிலும் தொடர்ந்து கொண்டிருந்த தேசிய விடுதலைப் போராட்டங்கள், தற்போது இருக்கும் தேச அரசுகளுக்கு ஒரு தொல்லையாக மாறின. பனிப்போரின் போது தமது சொந்த நலன்களுக்காகப் பல தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரித்து வந்த பல்வேறு தேச அரசுகள் தமக்கு நலன்கள் இல்லாத பட்சத்தில் இந்த ஆதரவினை நிறுத்திக் கொண்டன. அத்துடன்,

> சர்வதேச அரங்கில் ஒருபுறத்தில் சிறிலங்கா அரசின் துர்ப்பிரச்சாரங்களுக்கும் மறுபுறத்தில் இந்திய கொள்கை வகுப்பாளர்களினால் பரப்பப்பட்ட பொய்யுரைகளுக்கும் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச பரப்புரை விடுதலைப் புலிகளின் தலைமையில் எவரின் உதவியுமின்றி எம்மக்களின் பலத்தில் மட்டுமே தங்கி நிமிர்ந்தது.

பொதுவாக தேச அரசுகளின் (அவை செயற்கையானவையாக இருந்தாலும்) இருக்கையை உறுதி செய்தல் என்பது ஒரு மறைமுகமான உடன்பாடாக அரசுகளின் கழகமான ஐக்கிய நாடுகள் சபையில் உருவானது.

அத்துடன், உலகின் பல பாகங்களிலும் தொடர்ந்து கொண்டிருக்கும் தேசிய விடுலைப் போராட்டங்களை விரைவில் முடித்து வைப்பதில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் (குறிப்பாக மேற்கு நாடுகள்) அக்கறை கொண்டிருந்தன. ஏனெனில் இப்போராட்டங்கள் அந்த நாடுகளின் வர்த்தகம் சார்ந்த நலன்களுக்கு இடைஞ்சலாக இருந்தன.

எனவே, இந்நாடுகளின் தலையீடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் தீர்வுகள் நியாயபூர்வமானவையாக இருக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. தீர்வுகளின் நியாயத் தன்மை அடக்குமுறையினை எதிர்த்துப் போராடும் மக்களின் இராணுவ, அரசியல் பலத்தைப் பொறுத்து வேறுபட்டிருந்தது. பலமான நிலையிலிருந்த மக்கள் ஓரளவு நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த அதேவேளை, பலமற்ற நிலையிலிருந்த மக்கள் மீது நியாயமற்ற தீர்வுகள் திணிக்கப்பட்டன. மேலும், இத்தீர்வு முயற்சிகளினூடாக பல்வேறு தேச அரசுகளும் தமது நலன்களைப் பேணவும் முற்பட்டன.

அத்துடன், பனிப்போரின்பின் அமெரிக்காவின் நிலையில் புதியதொரு கொள்கை உருவாக்கம் பெற்றது. அதாவது கம்யூனிசத்திற்கு எதிராகக் கட்டி எழுப்பப்பட்ட அமெரிக்கக் கட்டமைப்புக்கு புதியதொரு இலக்கு தேவைப்பட்டது. அத்துடன், அமெரிக்காவின் நலன்களுக்குப் பாதகமாகச் செயற்படும் சக்திகளை இராணுவ ரீதியாக மிரட்ட கம்யூனிசம் பயன்படாமல் போனதால், "சர்வதேச பயங்கரவாதத்திற்கு" எதிரான போர் என்ற கோசத்தை அமெரிக்கா முன் வைத்தது.

இத்தகைய புதிய சர்வதேச சூழ்நிலையினூடாகவே தமிழீழ விடுதலைப் போராட்டம் தனது சர்வதேசப் பரிமாணத்தைப் பெற வேண்டியிருந்தது. இந்தப் புதிய உலக ஒழுங்கில் தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான பல சாதகமான அம்சங்களும் பல பாதகமான அம்சங்களும் காணப்படுகின்றன.

## தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய சர்வதேச அபிப்பிராயம்

# தமிழீழ விடுதலைப் போராட்டம் (2)

எனவே, இந்தப் புதிய உலக ஒழுங்கில் 1995ம் ஆண்டு மூன்றாம் கட்ட ஈழப்போர் வெடித்தமை, உலக நாடுகளின் பொதுவான நலன்களுக்குச் சாதகமானதாக அமையவில்லை. அதனால், உலக நாடுகளின் அனுதாபத்தினை உடனடியாகப் பெற்றுக் கொள்வது சந்திரிகா அரசிற்கு இலகுவாக இருந்தது. ஆனால், தமிழீழத்திலும் சிறிலங்காவிலும் நிலவிய அரசியல், இராணுவச் சூழ் நிலைகள் போரினை நோக்கியே இருந்தன. சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தையினைத் தனது நோக்கமான "சிங்கள – பௌத்த மேலாண்மையினைத் தமிழ் மக்கள் மீது திணித்தல்" என்பதை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தது.

மேலும், கால தாமதம் செய்தல், சிறிலங்கா அரசு தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான அடித்தளங்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போடுவதற்கு வாய்ப்பளிக்கும் என்பதைப் புரிந்து கொண்ட விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலக, மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை, சிறிலங்கா – தமிழீழ யுத்தத்தில் கொள்கை வகுப்பு என்பது தற்போதைக்கு மிக வரையறுக்கப்பட்டதொன்றாகவே இருக்கின்றது. இக்கொள்கை வகுப்புக்கு ஒரு இடைநிலை முக்கியத்துவமே கொடுக்கப்படுகின்றது. இக் கொள்கை வகுப்பில் முக்கியமானவர்களாக, கொழும்பில் இருக்கும் மேனாட்டு இராச தந்திரிகள் இருக்கின்றனர். இவர்கள் மத்தியில் சிறிலங்கா அரசிற்குப் பிரச்சாரம் செய்வது இலகுவாக இருந்ததும் பொதுவாக தமது நலன்கள் சிறிலங்கா அரசு சார்ந்து இருந்தமையும் போரின் ஆரம்பத்தில் இந்நாடுகள் விடுதலைப் புலிகளைக் கண்டிக்கும் தன்மைக்குக் காரணமாக அமைந்தன.

அத்துடன், இருபகுதியினருக்குமிடையே முரண்பாடு முழுமையடைந்திருப்பதை உணர்ந்து கொண்ட இந் நாடுகள், இப்போரில் ஒருபகுதியினர் தோற்கடிக்கப்பட்டால் ஏதாவது அரசியல் தீர்வொன்றினை ஏற்படுத்தலாம் என்ற முடிவினையும் எடுத்தனர். அத்துடன், சிறிலங்கா அரசானது எதற்கும் தலையாட்டும் ஒரு நட்பு நாடாக இருப்பதால் நேர்மை, நியாயம் என்பதற்கு அப்பால் சிறிலங்கா அரசு போரில் வெற்றி பெறுவதையே இந் நாடுகள் விரும்பின. அத்துடன், இப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக முற்றுப்புள்ளி ஒன்றை அது வைக்கலாம் என்ற முடிவையும் இந்நாடுகள் எடுத்துக் கொண்டன. இம் முடிவுகளே சந்திரிகா அரசுடன் இந்நாடுகள் இதுவரை கடைப் பிடித்து வந்த தாராள மனப் பான்மைக்குக் காரணமாகும். அத்துடன், மேற்குலக பிரச்சார சாதனங்களும் புலிகளைக் கொச்சைப்படுத்தும் நடவடிக் கையில் சந்திரிகாவுக்கு ஒத்துழைக்கத் தொடங்கின. ஆயுத, இராணுவ உதவிகளும் ஓரளவு வழங்கப்பட்டன. இதன் மூலம் சந்திரிகா அரசு புலிகளை ஒடுக்கி பின் அரசியல்ரீதியாக இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என மேற்கு நாடுகள் நம்பின.

இவ்வாறாக மேற்கு நாடுகளின் அபிப்பிராயங்கள் மூன்றாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பாதகமானவையாகவே இருந்தன. ஆயினும், இவை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக இந்நாடுகளால் உயர்மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிந்த முடிவுகளா? அப்படியான ஒரு முடிவினை எடுப்பதற்கு தங்கள் நலன் சார்ந்த ஏதாவது காரணிகள் இந்நாடுகளுக்கு உண்டா?



தமிழீழத் தேசியத் தலைவருடன், திருமலைத் துறைமுகக் கடலில் 19.04.95இல் நடாத்தப்பட்ட கடற்கரும்புலித் தாக்குதலில் பங்கேற்ற மேஜர் மதுசாவும், கப்டன் சாந்தாவும்.

இன்று மேற்கு நாடுகளின் பல தலைநகரங்களிலும் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் சுதந்திரமாக இயங்கி வருகின்றன. இவற்றை மூடிவிடும்படி சிறிலங்கா அரசு விடுக்கும் வேண்டுகோள்களுக்கு இந்நாடுகள் இன்னும் செவிசாய்க்கவில்லை. அத்துடன், இந்நாடுகள் தமது அனுதாபத்தை சிறிலங்கா அரசின் மீது காட்டிய போதும் ஒரு முழுமையான ஆதரவினை அவை சிறிலங்காவுக்கு வழங்கவில்லை. மேலும், சில நாடுகள் மனித உரிமைகள் தொடர்பாகச் சிறிலங்கா அரசைக் கண்டித்தும் உள்ளன.

இவற்றை நோக்கும்போது, விடுதலைப் புலிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்க வேண்டிய பெரிய தேவை தங்களின் நலன் சார்ந்து இந்நாடுகளுக்குத் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் தென்னாசியப் பிராந்தியத்தில், குறிப்பாக சிறிலங்காவிலும் தமிழீழத்திலும் இந்நாடுகளுக்கு (முக்கியமாக அமெரிக்கா, பிரித்தானியா) ஒரு அக்கறை புவியியல் ரீதியாக வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டு உள்ளது. இந்த அக்கறை சிறிலங்காவிலும் தமிழீழத்திலும் அமைதியும் அதனூடாக அங்கு தமது செல்வாக்கு வேரூன்றுதலும் என்பதாக உள்ளது. தற்போது அனுதாபம் சிறிலங்கா அரசு நோக்கி இருந்தாலும் எமது பலத்தைப் பொறுத்து இந்த அனுதாபத்தை எம் பக்கம் கொண்டு வரக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

மேற்கு நாடுகளின் நிலை இவ்வாறு இருக்க ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் நிலை எவ்வாறு இருந்தது? அனேக மூன்றாம் உலக நாடுகள் தேசிய விடுதலைப் போராட்டங்களினூடாக காலனித்துவ ஆட்சிகளிலிருந்து விடுதலை பெற்ற நாடுகளாகவே இருந்தன. இந்நாடுகளின் போராட்டத்தினை ஆதரித்த நாடு என்ற வகையில் இந்தியாவுக்கு இந்நாடுகளுடன் ஒரு நல்லுறவு இருந்தது. தமது சொந்த நலன்களுக்காக இந்திய மத்திய அரசின் கொள்கை வகுப்பாளர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கொள்கையினை வகுத்துச் செயற்பட்டனர். இதனால் இந்திய இராச தந்திரிகளின் பொய்ப் பிரச்சாரம் இந்நாடுகளில் பரவியிருந்தது.

இவ்வாறாக, சர்வதேச அரங்கில் ஒருபுறத்தில் சிறிலங்கா அரசின் துர்ப்பிரச்சாரங்களுக்கும் மறு புறத்தில் இந்திய கொள்கை வகுப்பாளர்களினால் பரப்பப்பட்ட பொய்யுரைகளுக்கும் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச பரப்புரை விடுதலைப் புலிகளின் தலைமையில் எவரின் உதவியுமின்றி எம்மக்களின் பலத்தில் மட்டுமே தங்கி நிமிர்ந்தது. ✳

- தீபன் -

( தொடரும் )

**பிரித்தானியாவின் புதிய பிரதமர் தெரிவை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் . அனுப்பிவைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியின் தமிழ் ஆக்கம்**

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
03.05.1997

மதிப்பிற்குரிய ரோனி பிளேயர்
பிரதமர்
இலண்டன்
ஐக்கிய இராச்சியம்

அன்புடையீர்!

தேர்தலில் தங்கள் கட்சி பெற்ற அமோக வெற்றியுடன் பிரதமராகப் பதவி ஏற்றிருக்கும் தங்களுக்கும் தங்கள் கட்சிக்கும் எமது உளப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

தங்களது திறமையான வழிகாட்டலுடனும் முற்போக்கான தலைமைத்துவத்துடனும், உலகளாவிய வறுமை, இனரீதியான ஒடுக்குமுறை மற்றும் சமூக அநீதிகள் நீங்கிய புதிய இணக்கமான உலக ஒழுங்கின் உருவாக்கத்திற்கு பிரித்தானியா காத்திரமான பங்களிப்பு வழங்கும் என நம்புகிறோம்.

தனது அரசியல் அந்தஸ்தைத் தானே சுயமாகத் தீர்மானித்துக் கொள்ளும் அபிலாசையுடன் நீண்ட உறுதியான போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுவரும் தமிழ்த் தேசிய இனம், தனது நியாயபூர்வமான அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தங்கள் அரசின் ஆதரவை நாடி நிற்கிறது.

தங்கள் வெற்றிக்கு எமது வாழ்த்துக்கள்!

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

**இந்தியப் பிரதமரின் தெரிவை வரவேற்று விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகத்தால் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியின் தமிழ் ஆக்கம்**

மாண்புமிகு இந்தர்குமார் குஜ்ரால் அவர்கள்,
பிரதம மந்திரி
புதுடில்லி
இந்தியா.

அன்புள்ள பெரியீர் வணக்கம்!

பெரும்புகழ் நிறைந்த பாரத தேசத்தின் பெருமைக்குரிய பிரதம மந்திரியாக நீங்கள் நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு நாங்கள் உங்களை வாயார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் பல நூற்றாண்டுகளாகவே இந்தியப் பெருமக்களோடு நெருக்கத்துடனும் பெருமையுடனும் உறவு கொண்டாடி வந்திருக்கின்றார்கள் என்பது நீங்கள் அறிந்ததுதான். அந்த உறவு எங்களைப் பொறுத்தவரையில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த உறவினைப் பேணிக்காத்து மென்மேலும் வளர்ப்பதற்கு ஈழத்தமிழர்களாகிய நாங்கள் உறுதிபூண்டிருக்கின்றோம்.

நாங்கள், தமிழ் நாட்டுச் சோதரங்களுடன் அன்னியோன்னியமான மொழிவழியுறவுகளைக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அகில இந்திய ரீதியாகப் பாரத தேசத்தின் சமய, கலாச்சாரப் பாரம்பரியங்களும் அபிலாசைகளுமே எமது சமயமாகவும் கலாச்சாரமாகவும், ஆசை அபிலாசைகளாகவும் இருந்து வருகின்றன.

இனிவரும் ஆண்டுகள், இந்திய மக்களுக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையில் நிலவி வருகின்ற இந்தப் பன்னூறாண்டுக்காலப் பிணைப்பையும் உறவையும் நட்பையும் மேலும் பலப்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றோம்.

மேம்பாடுமிக்க பிரதமர் பதவிக்கு நீங்கள் நியமிக்கப்பட்டிருப்பதையிட்டுத் தமிழர்களாகிய நாங்கள் பெருமிதமும் உற்சாகமும் அடைவதால், மேற்படி உறவுகள் மேலும் வலுவடைதல் உறுதியென்று நாங்கள் நம்புகின்றோம்.

இந்தியத் துணைக் கண்டத்தின் தலைமைப் பதவியான பிரதமர் பதவியை நீங்கள் ஏற்றிருப்பதையிட்டுக் குதூகலமும் களிப்பும் அடைகின்ற அதேவேளையில் தமிழீழ தேசம் சுயநிர்ணயம் செய்துகொள்ளும் வகையில் நீங்கள் இந்தியாவின் சார்பில் குரல்கொடுத்து ஆதரவு வழங்குவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்; அவ்வாறு குரல்கொடுப்பதன் மூலம், சொந்த நாட்டிலேயே ஆளும் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு இலக்காகி இன்னலுறும் தமிழ் மக்களின் அடிமை விலங்கும் தளையும் அறுந்தொழிய உதவுவீர்கள் என்று நம்புகின்றோம்.

இந்தியாவின் பிரதமர் பதவியை வகிக்கின்ற உங்களுக்கு எல்லா வெற்றியும் நலன்களும் சேர்வனவாக என்று வாழ்த்துகின்றோம். பாரதப் பிரதமராகிய உங்களின் தண்ணளிவான பார்வையும் கவனமும், நாளுக்கு நாள் நலிந்து மோசமாகிக் கொண்டிருக்கும் நமது தமிழ் மக்களின் அவலம் நோக்கியும் திரும்ப வேண்டும் என்று இறைவனையும் உங்களையும் வேண்டிக்கேட்கின்றோம். நீடூழி வாழ்க.

இப்படிக்கு,
வினையாற்றுக் குழு
தமிழீழ விடுதலைப் புலிகளின்
நாட்டாமிடைச் செயலகம் (அனைத்துலகச் செயலகம்). பிரித்தானியா

# சுவிசில் மேதின ஊர்வலம்

கடந்த 01-05-97, சுவிட்சலாந்து சூரிச் மாநகரில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தின் பின்பு, கெல்வெற்றியா பிளாற்ஸ் முன்றலில் பல்லாயிரக்கணக்கான, பல்வேறு நாட்டின மக்கள் கலந்து கொண்ட மாபெரும் கூட்டத்தில், மேதின நடவடிக்கைக் குழுப் பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரையின் சுருக்கத்தின் தமிழாக்கம் வருமாறு:

அன்பு நண்பர்களே! தோழர்களே! மேதினக் கொண்டாட்டக் குழுவின் சார்பில் உங்கள் அனைவரையும் வரவேற்கின்றேன். சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடவும், அடக்குமுறையும் சுரண்டலுமற்று நீதியும் சுதந்திரமும் சமத்துவமுமான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் எங்கள் உறுதிப்பாட்டை புதுப்பித்துக் கொள்ளவும் நாங்கள் இங்கே கூடியுள்ளோம்.

அடக்குமுறையினால் வறுமையுடன் போராட முடியாது என்பதே 1997ஆம் ஆண்டுக்கான எமது மேதின கோசமாகும். சுதந்திரம், நீதி, சமத்துவம் என்பவை வெறுமையான வார்த்தைகள் அல்ல. அவை ஆழமான கருத்து வேர்களை ஊன்றி மனித முயற்சிகளை ஊக்குவிப்பவை. நீதியின்றி நாம் சமாதானத்தைக் காண முடியாது. சுதந்திரமின்றி உற்பத்தியைப் பெருக்க முடியாது. சமத்துவமின்றி ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காண முடியாது.

சந்தைப் பொருளாதாரம் சுரண்டலையும் சமத்துவமின்மையையும் வலியுறுத்துகிறது. "ஒவ்வொருவரும் அவரவருக்காகவே" என்பதே சந்தைப் பொருளாதாரத்தின் கோட்பாடாகும். இந்தக் கோட்பாடும் கோசமும் அபிவிருத்திக்கு-குறிப்பாக பொருளாதார அபிவிருத்திக்குக்கூட ஏற்புடையதல்ல. இக்கோட்பாடு மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துமே தவிர ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.

தனிச் சொத்துடமை, சந்தைப் பொருளாதாரம் ஆகிய முதலாளித்துவ சுரண்டல் அமைப்புமுறை, பல நூற்றாண்டுகளாகவே உற்பத்தியில் பங்கேற்க முடியாதவர்களை அடக்குவதிலும், அடக்குமுறைக்கு எதிராகப் போராட முடியாதவர்களை சுரண்டுவதிலும் ஈடுபட்டு வருகிறது.

பெண்கள், இனச் சிறுபான்மையோர் ஏழைகள் ஆகியோரை சீரழிப்பதில் முதலாளித்துவமுறை பிரதான பொறுப்பாளியாகிறது. இம் முதலாளித்துவமுறை சமூகத்திலுள்ள ஏழைகளையும் வசதியற்றவர்களையும் அடக்கி ஒடுக்குகிறது. அதேபோல் நாம் அடிக்கடி சந்திக்கும் இனவாதமும் வகுப்புவாதமும் தமது அசிங்கமான தலைகளை நிமிர்த்தி உயர வழி கோலியுள்ளது. தான் வாழ்வதற்காக, தான் விற்கக்கூடிய ஒரேயொரு பொருள் தனது உழைப்பு மட்டுமே என்ற நிலையிலுள்ள தொழிலாளிபற்றி நாம் பாரதூரமான அக்கறை கொண்டுள்ளோம். வசதியற்றவர்கள், வீடற்றவர்கள், ஏழைகள், வேலையற்றோர் மற்றும் இனச் சிறுபான்மையோருக்கு எதிரான பாரபட்சங்கள் ஆகியவை பற்றி எமது பாரிய அக்கறையின் விளைவாகவே நாம் இங்கே இந்தச் சர்வதேச தொழிலாளர் தினத்தில் கூடியிருக்கின்றோம்.

நான் சார்ந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பல இன்னல்களுக்கிடையில் தேசிய விடுதலைக்கான தனது போராட்டத்தைச் சிறிலங்காவில் முன்னெடுத்துச் செல்கின்றது. சிறிலங்காவின் கொடுங்கோல் ஆட்சியின் அடக்குமுறைகளுக்கெதிராக தமிழ் மக்களின் உறுதியான போராட்டத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வழிநடத்திச் செல்கின்றது. தமிழ் மக்களின் இப்போராட்டமானது எம் மத்தியில் நிலவும் சாதீயம் மற்றும் சமுதாய அடக்குமுறைகளுக்கெதிராகவும் போராடுகின்றது. "துன்ப அனுபவம் சிறந்த ஆசிரியன்". தமிழ்த் தாயகத்தின் மேல் நடத்தப்படும் இனப்படுகொலைகள் தமிழ் மக்களின் மனோ உறுதியை மேலும் வலுப்படுத்தி, அவர்கள் மேல் செலுத்தப்படும் அடக்குமுறையை தீவிரமாக எதிர்கொள்ள உதவி செய்கிறது. பிரச்சினைகளைத் தீர்க்க மூன்றாவது அணியொன்றின் மத்தியஸ்தத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் கோரியிருந்த போதும் அவற்றிற்கு சாதகமான பிரதிபலிப்பு ஏற்படவில்லை.

அன்பான நண்பர்களே! தோழர்களே! இந்தச் சிறிய உலகில் அடக்குமுறை என்பது எங்கும் நிலையற்ற தன்மையைத்தான் உருவாக்குகின்றது. உதாரணமாக சிறிலங்காவிலும் குர்திஸ்தானிலும் மேற்கொள்ளப்படும் அடக்குமுறையானது பல்லாயிரக்கணக்கானோரை அகதிகளாக்கி அவர்களை ஐரோப்பிய நாடுகளில் அகதி விண்ணப்பம் கோர வைத்துள்ளது. இந்த அகதிகளுக்கான அடிப்படை உரிமைகள் ஐரோப்பிய நாடுகளில் மறுக்கப்படுகின்றன. இந்த மறுப்பை நியாயப்படுத்த அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் 'பயங்கரவாதம்' என முத்திரை குத்தப்படுகிறது. இதுதான் நாம் இன்று நோக்கும் உண்மையான ஆபத்தாகும்.

எம் எல்லா மக்களதும் சக்தியை ஒன்றுபடுத்தாவிட்டால் நாம் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை நாம் உணர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் முற்போக்கு சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்ய வேண்டியது எமது சரித்திரபூர்வமான கடமையாகும். கடந்த ஆண்டு நான் சிறையிலே தடுத்து வைத்திருக்கப்பட்டபோதும்கூட என்னை சென்ற வருட மே தினக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்ற அழைப்பு விடுத்த மேதின நடவடிக்கைக் குழுவிற்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி. வணக்கம்.

# ஜெனிவா ஒப்பந்தம் கனேடிய நாட்டின் சட்டமாக எழுதப்பட்டுள்ளது

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

**உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.**

**வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.**

**மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.**

**அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.**

கூட்டு இராணுவ அதிகாரிகள் அதனை (ஒப்பந்தம்-1) அங்கீகரித்தார்கள். இராணுவக் கண்ணோட்டத்தில் அவர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இருக்கவில்லை. செனட் வெளியுறவுக் குழுவில் அந்த ஒப்பந்தம் பரிசீல னைக்காகக் காத்திருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் நீகன் நிர்வாகம் பின்வரும் அறிக்கையை வெளியிட்டது. "ஒப்பந் தத்தின் 4வது பந்தி முதலாவது விதியை நாம் நிராகரிப்போம்; ஆனால் அதன் மிகுதி முழுவதையும் ஏற்றுக்கொள்ளப் போகிறோம் என்று அந்த அறிக்கை கூறியது.

உங்களுக்குத் தெரியும் ஒப்பந்தங்கள் மொத்த விற்பனை போன்றது. அதில் வேண்டியதை எடுத்துக்கொண்டு வேண்டாததை விட்டுவிட முடியாது. இதனால் ஒப்பந்தம்-1 ஐப் பற்றி அமெரிக்காவில் தீவிர விவாதம் ஏற்பட்டது. எனது கட்டுரை, ஒப்பந்தம் ஒன்றை உறுதிப்படுத்தப் படவேண்டும் என்ற வேண்டுகோளை நோக்கமாகக் கொண்டது. அது மட்டுமல்ல, பயங்கரவாதம் என்ற சொல்லை நீகன் நிர்வாகம் துஷ்பிரயோகம் செய்வதைக் கண்டிக்கும் நோக்கமும் கொண்டது. ஒப்பந்தம்-1 ஐமிட்டு நிக்ஷன் நிர்வாகம் சரி, போட் நிர்வாகம் சரி அல்லது காட்டர் நிர்வாகம் சரி, நீகன் நிர்வாகம் சரி நடந்துகொண்டதே இல்லை.

நான் தெரிவித்தவாறு அதுவரை வழக்கறிஞர்கள் ஒப்பந்தம்-1 ஐ சட்டம் என்ற முறையில் சட்டக் கண்ணோடுதான் கையாண்டார்கள்.

கேள்வி: ஐயா, உங்களை பக்கம் 94இல் காணப்படும் 'இருந்தும்' என்று தொடங்கும் பந்தியைப் பார்க்குமாறு கேட்கிறேன். பதிவுக்காக அதனைப் பார்க்கும்படி கேட்கிறேன்.

"......... இருந்தும் எல்லாவிதத்திலும் நிறைவாய் இல்லாவிட்டாலும், ஒப்பந்தம்-1இல் வகுக்கப்பட்ட விதிகள் இன்றைய சூழ்நிலையில் ஆகக்கூடிய உலகளாவிய அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பதாகும். அதாவது அப்பாவிப் பொதுமக்களுக்காக, தேசிய விடுதலை இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களால் இழைக்கப்பட்ட வன்செயல்களை எப்படிக் கையாள வேண்டும் என்பதாகும்........."

மேலும், பக்கம் 96இல் "அமெரிக்காவின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தும்போது ஒப்பந்தம்-1ஐ எவ்வாறு வழிகாட்டியாக வைத்துக் கொள்ளலாம்" என்ற தலைப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"அப்பாவிப் பொதுமக்களுக்கெதிராக, தேசிய விடுதலை இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களால் இழைக்கப்படும் உலகளாவிய வன்செயல்களைப்பற்றிய பிரச்சினையை எப்படிக் கையாள வேண்டும் என்ற மன ஒற்றுமையை ஒப்பந்தம்-1 பிரதிபலிக்கிறது"

பதில்: அதனை நான் இப்போதும் ஆமோதிக்கிறேன். கனேடிய அரசும் என்னோடு ஒத்துப்போவதை நீங்கள் கவனிப்பீர்கள். ஆன காரணத்தினால்தான், கனேடிய அரசும் ஒப்பந்தம்-1ஐ உறுதி செய்துள்ளது.

நீதிபதி: ஐயா, எனக்குத் தெரியாது. இது அவர்கள் (கனேடிய அரசு) ஏன் அந்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தினார்கள் என்பது பற்றிய உமது அபிப்பிராயம். உமது அபிப்பிராயத்தோடு ஒத்துப் போனதாலேயே அவர்கள் அதனை (ஒப்பந்தம்) உறுதிப்படுத்தினார்கள் என்று நான் நினைக்கவில்லை.

சாட்சி: சரி, அவர்கள் ஒப்பந்தம்-1றோடு ஒத்துப்போனார்கள்.

நீதிபதி: ஆனபடியால் உறுதிப் படுத்தினார்கள்.

சாட்சி: நான் முன்னர் கூறியவாறு அதை எழுதிய காலகட்டத்தில் கிட்டத்தட்ட 76 அரசுகள் இருந்தன. இப்போது அந்த எண்ணிக்கை 100ஆக உயர்ந்திருக் கிறதென நினைக்கிறேன். இந்த நாடுகள் ஒப்பந்தம்-1ஐ உறுதிப்படுத்தியுள்ளன. ஒப்பந்தம்-1ஐ இட்டு அமெரிக்க அகில உலக சட்ட நிபுணர்களது நிலைப்பாடு சம்பந்தமாக விவாதிக்கிறேன். அண்மையில் ஒப்பந்தம்-1ஐ உறுதிப் படுத்திக்கொள்வது பற்றி அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யப்போவதாக அரசாங்க திணைக்களம் அறிக்கை விடுத்துள்ளது.

திரு. வயலன்கோட்:

கேள்வி: நான் இரண்டு மேற்கோள்கள் பற்றி குறிப்பிட்டேன். சுருக்கமாகச் சொன்னால், அப்பாவிப் பொது மக்களுக்கெதிராக, தேசிய விடுதலை இயக்கங்கள் என்று அழைக்கப்படுகின்ற அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இழைக்கும் வன்செயல்களுக்கு எதிராக, எப்படிச் செயற்பட வேண்டும் என்ற உலகளாவிய அபிப்பிராயத்தின் பரந்தளவு கருத்தொற்றுமையை ஒப்பந்தம்-1 பிரதிபலிக்கிறது. அதாவது நீர் எதைக் குறிப்பாகச் சொல்கிறீர் என்றால், ஆயுத மோதல் இடம்பெறும்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் எவ்வாறு நடாத்தப்படுகிறாரோ அதேமாதிரி தேசிய விடுதலை இயக்க உறுப்பினர்களும் நடாத்தப்பட வேண்டும். ஒரு யுத்த நாடு சிறிலங்கா என்று வைத்துக் கொள்வோம். ஒரு விடுதலைப் போராளியைச் சிறைப்பிடித்தால் அவரை ஒரு கிறிமினல் என்று வழக்குத் தொடராது, யுத்தக் கைதி என்று நடாத்தப்படவேண்டும்.

அந்த நபர் (போராளி) அந்த மோதல் தொடரும் காலம்வரை தடுத்து வைக்கப்படலாம். அல்லது மேற்கொண்டு மோதலில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதிமொழியில் விடுவிக்கப்படலாம். அல்லது யுத்தக் கைதியாகப் பரிமாற்றம் செய்யப்படலாம்.

பதில்: இவைதான் வழமையான விதிகள்.

கேள்வி: தேசிய விடுதலை இயக்க உறுப்பினர் இன்னொரு போராளி (இராணுவம்) போல் நடாத்தப்படுவர்.

நீதிபதி: ஆகவே அவர் யுத்தக் கிறிமினல் அல்ல.

சாட்சி: போராளி பொதுமக்களை கொன்றால், நான் நினைக்கிறேன்.........

திரு. வயலன்கோட்

கேள்வி: நான் அதற்கு வருவேன். ஐயா, நான் அதற்கு வருவேன்.

பதில்: யுத்தக் குற்றத்திற்கு அவர் மீது வழக்குத் தொடரலாம். ஆம், அதுதான் ஒப்பந்தம்-1 ஏற்படுத்தியுள்ள விதிகள்.

கேள்வி: நிச்சயமாக ஜெனிவா ஒப்பந்தம்-1இன் கருத்துப்படி, ஒரு நிலையான இராணுவத்தைச் சார்ந்த ஒரு சிப்பாய்க்கு எது பொருந்துமோ (உமது நிலைப்பாடும் அபிப்பிராயமும் அதுதான்) அதே போல் ஒரு தேசிய விடுதலை இயக்கப் போராளி சிறைப்பிடிக்கப்பட்டால் அந்தப் போராளி யுத்தக் கைதியாகவே நடாத்தப்படுவார். ஆனால், அவர் ஒரு பாரபட்சமற்ற அகில உலக (நீதி) ஆணைக்குழுமுன் யுத்தக் குற்றம் இழைத்த குற்றச் சாட்டில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். பெரும்பாலும் இந்த விசாரணை ஒரு நடுநிலை நாட்டில் அல்லது அகில உலக நீதிமன்றத்தில் இடம்பெறலாம்.

பதில்: இது நான் இன்று அளித்த சாட்சியத்தோடு ஒத்துப்போகிறது. எந்தப் பக்கத்திலிருந்து இந்த மேற்கோளை எடுத்தீர்?

கேள்வி: 107வது பக்கத்தின் அடி 108வது பக்கத்தின் ஆரம்பம். நீர் இன்று கூறியதை நான் மறுக்கவில்லை. நாம் உமக்குச் சொல்வது என்னவென்றால், ஒப்பந்தம்-1 அப்பாவிப் பொது மக்களுக்கெதிராக தேசிய விடுதலை இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களால் இழைக்கப்படும் வன்செயல்களை எப்படிக் கையாளவேண்டும் என்பதை இட்டு அகில உலக சமூகத்தின் பரந்தளவு கருத்தொற்றுமையைப் பிரதிபலிக்கிறது. அதற்கு மேலாக அது ஒன்றையும் செய்யவில்லை. தேசிய விடுதலை இயக்கங்கள் என்று அழைக்கப்படுகின்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் 'போராளிகள்' என்ற முறையில் எவ்வாறு நடாத்தப்படவேண்டும் என்பதை வரை செய்கிறது. அவ்வளவுதான். அதன்படி ஒரு நிலையான இராணுவத்தின் சிப்பாய்போல இராணுவச் சட்டத்திற்கும் சட்டவிதிகளுக்கும் அமைய அவர்கள் (போராளிகள்) நடாத்தப்படவேண்டும்?

பதில்: அவர்கள் ஒப்பந்தம்-1இன் கீழ் நடாத்தப்படவேண்டும். ஆனால், சகல ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் இவற்றின் கட்டுப்பாட்டுக்கு அமையவும் வேண்டும். ஜெனிவா மரபுகள் இருக்கின்றன. இரண்டு ஒப்பந்தங்கள் இவற்றோடு முதலாவது ஒப்பந்தம் இந்த சட்டங்களை ஒரு தேசிய விடுதலைப் போராளிக்குப் பொருத்திவிடும்.

கேள்வி: அதைத்தான் ஐயா, நான் சொல்கிறேன். ஒப்பந்தம்-1 தேசிய விடுதலை இயக்கம் எனச் சொல் லப்படுகின்ற அமைப்புப் பற்றி சொல்கிறது. போராளி எப்படி நடத்தப்பட வேண்டும் என வரை செய்கிறது. அதாவது, ஒரு ஆயுத மோதலில் ஈடுபடும் சிப்பாய் போல நடாத்தப்பட வேண்டும் என்கிறது. அதைத்தான் அது (ஒப்பந்தம்) செய்கிறது. அதைத்தான் நீர் வலியுறுத்துகிறீர்?

பதில்: ஒப்பந்தம்-1 அதைத்தான் செய்கிறது.

கேள்வி: மெத்தச் சரி.

பதில்: அவர்களை (போராளிகள்) இராணுவச் சிப்பாய்போல் நடத்துகிறது.

கேள்வி: ஒப்பந்தம்-1 பயங்கரவாதம் பற்றி வரைவிலக்கணம் எதையும் சொல்லவில்லை?

பதில்: இல்லை.

கேள்வி: மெத்தச் சரி. நான் ஒப்பந்தம்-1 'பயங்கரவாதம்' என்ற பதத்தை உபயோகிக்கவில்லை எனச் சொல்கிறேன். 'பயங்கரவாதம்' என்ற சொல் அதில் இல்லை?

பதில்: நான் நம்புகிறேன், அந்தப் பதம் அதில் இருக்கலாம். ஆனால், அதற்கு வரைவிலக்கணம் கிடையாது.

கேள்வி: அதற்கு வரைவிலக்கணம் இல்லை? ஒப்பந்தம்-1ம் அதனை வரையறை செய்யவில்லை?

பதில்: இல்லை.

கேள்வி: காரணம் இதுபற்றி (வரைவிலக்கணம்) அகில உலக சமூகத்தின் மத்தியில் கருத்தொற்றுமை காணமுடியவில்லை.

பதில்: அது சரி.

தொடரும்........

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதின்மூன்று

(தொடர்ச்சி)

நம்பிக்கையூட்டும் விதத்தில் கதைக்கவில்லை.

ஒருவாரம் சென்றது. இரண்டு வாரம்.... மூன்றாவது......

ஆனி, ஆடி எனச் சித்திரவதை ஆகேயுக்கும், மேற்றாவுக்கும் நீண்டு கொண்டே சென்றது. அவர்கள் கரேனுடைய அறைக் கதவருகே அதிகநேரம் அடிக்கடி நிற்கத் தொடங்கினர். அவ்வறையில் கிளுகிளுப்பும், மென்மையும், அங்குவீசிய சுகந்தத்தோடு இரண்டறக் கலந்திருந்தன. அவளுடைய பனிச்சறுக்கும் கருவிகளும் (Ice Skates), பாலே நடனக் காலணிகள், வகுப்பறைத் தோழிகளின் படங்கள், பிரபல பாலே நடனமாதர்களின் (Prima Ballerinas) படங்களும் இருந்தன. அவளுடைய காதலனான பீற்றா சென்னுடைய படமும் இருந்தது.

கடைசியாக அவர்களுக்கு அகதிகள் நிறுவனத்திலிருந்து ஒரு நாள் அழைப்பு வந்தது.

"எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி எதுவித விபரங்களையும் பெற முடியவில்லை. இது முடிந்த முடிவாகக் கருதவேண்டியதில்லை. இது ஒரு நீண்ட காலமெடுக்கும் வேலை. என்னுடைய கருத்தைக் கேட்டால், தன் உறவினரைத் தேடி ஜேர்மனிக்குள் கரேன் தனியாகப் போகக்கூடாது என்றுதான் சொல்வேன். ஹான்சனுடன் கூட அவள் போகக்கூடாது. ஜேர்மனிக்குள் பலத்த குழப்பநிலை நிலவுவதால், இங்கிருந்தே நாங்கள் தெரிந்துகொள்ள முடியாத தெதுவும், உங்களால் சுயமாகத் தெரிந்துகொள்ள முடியுமென நினைக்கவில்லை." அந்தப்பெண் மூவரையும் நேராகப் பார்த்தபடி சொன்னாள், தொடர்ந்து "நான் உங்களுக்கு ஒன்றைப்பற்றி எச்சரிக்க வேண்டும். ஏதோ இரகசியமான பயங்கரமொன்று அங்கே நிகழ்ந்திருக்கிறது என எங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் சொல்கின்றன.

யூதர்கள் பலபேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்களின் தொகை லட்சக்கணக்காக இருக்கும் என அஞ்சப்படுகின்றது.

இது ஹான்சன் தம்பதியினருக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. சே! என்ன மாதிரியான கொடூரமான ஆறுதல். அவளுடைய குடும்பத்தவர் ஐம்பது பேருக்குமேல் கொல்லப்பட்டதால் இவளை வைத்திருக்கலாமா? அல்லது.... இரண்டு திசைகளிலே ஹான்சன் தம்பதியினரின் மனங்கள் அலைபாய்ந்தன. இதற்கான தீர்வு கரேனிடம் இருந்தே வந்தது.

அவள் ஹான்சன் தம்பதியினரிடமிருந்து பெற்றுக்கொண்ட, அவள் அவர்கள்மேல் காட்டிய அன்புக்கு மத்தியிலும், ஒரு மெலிதான விசித்திரமான திரை அவர்கள் மத்தியில் எப்போதும் இருந்தது. ஜேர்மன் ஆக்கிரமிப்பின் ஆரம்பத்திலேயே, அவள் எட்டு வயதாயிருக்கும் போது, அவள் யூதஇனத்தவள் என்பதை கதைத்தால் அவளுக்கு உயிர் ஆபத்து வரலாம் என ஹான்சன் சொல்லியிருந்தார். அவருடைய எல்லாக் கட்டளைகளுக்கும் போலவே, இதற்கும் அவர்மீதிருந்த அன்பின் காரணமாகவும், நம்பிக்கையின் காரணமாகவும் பணிந்து நடந்துவந்தாள். அவள் இந்தக்கட்டளைக்குப் பணிந்து நடந்து வந்தாலும், தான் மற்றவர்களிலிருந்து வேறுபடுவது எப்படி என்றும், வேறுபடுத்தும் உயிராபத்து விளைவிக்கக் கூடிய அந்தக் காரணம் என்ன? என்றும் சிந்தித்து வந்தாள். இந்தக்கேள்வியை அவள் கேட்க முடியாமல் இருந்ததால், அதற்கான பதிலும் அவளுக்குக் கிடைக்கவில்லை.

மேலும், கரேன் யூதர்களோடு எது விதத்திலும் தொடர்பு படாமல் தனிமைப்படுத்தப் பட்டிருந்தாள். இதனால் அவள் மற்ற எல்லோரையும் போல தோற்றமளித்தாலும், மற்றவர்களைப்போல உணர்ந்தும் வந்திருந்தாள். எனினும் அந்தக் கண்ணுக்குப் புலப்படாத திரை இருந்தே வந்தது.

அவளுடைய இந்தக்கேள்வி அப்படியே புதைந்தும் போயிருக்கலாம். ஆனால், ஆகேயும் மேற்றாவும் அப்படிப்போக விடாமல், ஜாக்கிரதையாக உயிரூட்டிக் கொண்டிருந்தனர். தங்களுடைய டென்மார்க் லூத்தரன் திருச்சபையின் (Lutheran Church) பாரம்பரியத்துக்கு விசுவாசமானவர்களாகவும், அர்ப்பணிப்புள்ளவர்களாகவும் இருந்தார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மூவரும் கோவிலுக்கு ஒன்றாகச் செல்வதோடு, ஒவ்வொருநாளும் படுக்கைக்குப் போகுமுன் தாவீதின் சங்கீதங்களில் (Book of Psalms) இருந்து சிறிது வாசிப்பார்கள். தனது பத்தாவது பிறந்தநாளுக்கு ஹான்சன் அவளுக்குப் பரிசளித்த வெண்மைநிற தோலுறை போடப்பட்ட வேதாகமப் புத்தகத்தை அவள் மிகவும் பாதுகாத்துப் பேணி வந்தாள். அதிலிருந்த தேவதைக் கதைகள் போன்றவற்றை ரசமான கதைகளை மிகவும் விரும்பினாள். விசேடமாக நீதிபதிகள் சாமுவேலும் அரசர்களும் போன்ற (Samuel Kings) வேதாகம அதிகாரங்களின் தலைப்புக்கள், அதிகாரங்களில் நிரம்பியிருந்த காதலும் வீரமும் போர்களும் அவளை மிகவும் கவர்ந்தன. பைபிளை வாசிப்பது, ஹான்ஸ் கிறிஸ்ரியின் அன்டோசனின் எழுத்துக்களையே வாசிப்பது போல் இருக்கும்.

ஆனால், வேதாகமத்தை வாசிப்பது குழப்பத்திலும் கரேனை ஆழ்த்தி வந்தது.

எவ்வளவோ தரம் இக்குழப்பங்களை ஆகேயோடு பேசித் தீர்க்கவேண்டுமென அவள் விரும்புவாள். யேசு யூதரில் ஒருவராகவே பிறந்தார். அவரின் தாயும் சீடர்களும் யூதர்கள். கரேனுடைய மனதை மிகவும் கவர்ந்த வேதாகமத்தின் முதல் பகுதி முழுவதும் யூதர்களைப் பற்றியதே. அந்த முதல் பகுதியிலே, யூதர்கள்தான் இறைவன் சித்தத்தை நிறைவேற்றத் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்று




திரும்பத்திரும்பக் கூறப்பட்டிருக்கிறதே? இது உண்மையானால், யூதராயிருப்பது ஏன் ஆபத்துக்குரியது? ஏன் எல்லா யூதரும் இப்படி வெறுக்கப்படுகிறார்கள்? அவள் வயது முதிரமுதிர மேலும் ஆழமாகத் துருவத்தொடங்கினாள். அவள் வேதாகமத்தை வாசிக்கும் போது யூதர்கள் தவறு செய்த பல சந்தர்ப்பங்களில் கடவுள் அவர்களைத் தண்டித்திருப்பதைக் கவனித்தாள். யூதர்கள் அவ்வளவு கூடாதவர்களா?

கரேன் எதையும் அறிய ஆவலாயிருந்த ஒரு பெண். இந்தக் கேள்விகள் அவள் மனதில் எழ, எழ அவை அவளை மேலும் குழப்பத்திலாழ்த்தின. வேதாகமம் அவளின் இரகசிய, பிடிவாதமான கொள்கைப் பிடிப்புக்கு ஏதுவானதாயிற்று. தன்னுடைய அறையின் அமைதியான சூழ்நிலையில் தன்னுடைய புதிர்களுக்கு விடைதேடி வேதாகமத்தில் பல பாகங்களை வாசிப்பாள்.

வயது முதிர, முதிர எவ்வளவு கூடக்கூட வாசித்தாளோ அவ்வளவுக்கு மேலும் மேலும் குழப்பமடைந்தாள். அவளுக்குப் பதினான்கு வயதானபோது, வேதாகமத்தின் பலபகுதிகளை அர்த்தப்படுத்தி விளங்கப்படுத்த அவளுக்கு முடிந்தது. யேசு படிப்பித்த எல்லாமும், அவருடைய சிந்தனைகளும் ஏற்கனவே வேதாகமத்தில் புதைந்திருந்தன. யேசு திரும்பவும் உலகத்துக்கு வந்தால், ஒரு ஆலயத்துக்குச் செல்வதைவிட யூத வழிபாட்டுக் கூடத்துக்குச் செல்வதை விரும்புவர் என அவள் திடமாக நம்பினாள். யேசுவை வணங்கும் மனிதர்களால், எப்படி அவருடைய மக்களை வெறுக்க முடிகிறது.

அவளுடைய பதினான்காவது வயதில் இன்னுமொன்று நிகழ்ந்தது. அந்த வயதில் டென்மார்க் பெண்களை மிகுந்த சம்பிரதாய சடங்குகளோடு திருச்சபையில் உறுதிப்படுத்துவது வழக்கம். கரேன் டென்மார்க்கியப் பெண்ணாகவும், கிறிஸ்தவளாகவும் வாழ்ந்து வந்திருந்தாலும் ஹான்சன் அவளை இந்த உறுதிப்படுத்தும் சடங்கிற்கு உட்படுத்தத் தயங்கினார். கடவுளால் நியமிக்கப்பட்ட ஒரு விடயத்தை மாற்றும் பொறுப்பை தாங்களாகவே எடுத்துக்கொள்ள முடியாதென்ற முடிவுக்கு பலத்த ஆலோசனையின் பின் வந்தார். போரின் காரணமாகவும், நிலவும் நிச்சயமற்ற நிலைமைகளின் காரணமாகவும், உறுதிப்படுத்தும் சடங்கினை பிற்போட்டிருப்பதாக அவர்கள் கரேனுக்குக் கூறிவிட்டனர். ஆயினும் கரேனுக்கு உண்மைக் காரணம் தெரிந்தே இருந்தது.

அவள் முதன்முதல் ஹான்சன் தம்பதியினரிடம் வந்தபோது, அவளுக்கு அன்பும் அடைக்கலமும் தேவையாயிருந்தது. இப்பொழுது அவளுடைய தேவைகள் விரிவடைந்து தனக்கே சொந்தமான அடையாளத்தைத் தேடத் தொடங்கியிருந்தாள். ஒரு யூத இனத்தவளாக இருப்பதன் பிரச்சினையின் இரகசியத்தோடு தன் குடும்பத்தவர்களைப் பற்றியதும் அவளுடைய கடந்த காலத்தைப் பற்றியதுமான இரகசியங்களும் இணைந்து கொண்டன. தான் ஒரு டென்மார்க் நாட்டவள் என்ற நிலையை நிரந்தரமாக எடுத்துக்கொள்ள, இந்த எரியூட்டும் பிரச்சினைகளுக்குக் கதவடைத்து விடவேண்டிய தேவை இருந்தது. ஆனால், அவளால் அது முடியவில்லை. அவளுடைய வாழ்க்கை, அவளுடைய கடந்தகாலம், அவளுடைய மதம் போன்றவை தற்காலிகமான சுவரொன்றில் தங்கியிருந்தது. இச்சுவரே அவளுக்கும் ஹான்சன் தம்பதியினருக்கும் இடையே நின்றது.

போர் முடிவடையவும் கட்டத்தை நெருங்கியபோது, அவர்களிடம் இருந்து பிரித்தெடுக்கப்படலாம் என்று தெரிந்திருந்தது. புத்திசாலித்தனமாக, அவள் இந்தத்

**லியோன் யூரிஸ்**

தவிர்க்க முடியாத பிரிவின் தாக்கத்தைத் தாங்கத் தயாராகி வந்தாள். கரேன் ஹான்சனாக இருப்பது சும்மா ஒரு விளையாட்டு மாதிரித்தான். கரேன் கிளமென்ற் ஆகிவிடவேண்டிய அவசரத்தை உண்டாக்கிக் கொண்டாள். அவள் தன் கடந்தகாலங்களின் துணுக்குகளை நினைவில் மீள உருவாக்கிவிட முனைந்தாள். தன்னுடைய தந்தையை, தாயை, சகோதரர்களை ஞாபகம் ஊட்டிக்கொள்ள முயன்றாள். கடந்தகால நிகழ்வுகளின் பகுதிகள் தெளிவில்லாமலும், தொடர்பில்லாமலும் அவள் நினைவில் நிழலாடின. அவள் திரும்பத் திரும்ப அவர்களுடனான இணைவு எப்படியிருக்கும் என்று மனதில் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முடிவில்லாமல் இந்த விருப்பங்களை மனதில் இருத்திக் கொண்டாள்.

போர் முடிந்தபோது, கரேன் வரஇருப்பவைகளுக்குத் தன்னை முற்றாகத் தயாராக்கிக் கொண்டு விட்டாள். போர் முடிந்த சில மாதங்களின்பின் ஓரிரவில் அவள் தன் பெற்றோரைத் தேடி ஜேர்மனி செல்லப்போவதாக ஹான்சன் தம்பதியினருக்குத் தெரிவித்தாள். அவள் அகதிகள் நிறுவனப் பெண்ணோடு கலந்துரையாடியதில் இருந்து சுவீடனில் அமைந்திருக்கும் இடம் பெயர்ந்தவர்களின் முகாமுக்குச் சென்றால் தன் குடும்பத்தவரைத் தேடிக் கண்டுபிடிக்கும்

தொடரும்...

இழப்பதற்கு எதுவுமில்லை...! இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி ! மறுகையில் மண்வெட்டி ! ஊனின்றி, உறக்கமின்றி, வியர்வையையும், இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து, விலைமதிப்பில்லாத் தங்கள் தாயகத்தை மீட்டெடுக்கின்றார்கள்.




# அய்நாவில் தமிழ் ஈழம் அமர்ந்திடுமே!

## விடுதலைப் புலிகள் !

இவர்கள்:
கொள்கையில் குன்றங்கள்!
குறிக்கோளில் கூர்வாட்கள்!
உறங்காத தேனீக்கள்!
ஒலிக்கின்ற போர்ப்பறைகள்!
விழிநோக்கி வேல்பாய்ந்தும்
விழிஇமைக்கா வேங்கையர்கள்!
போர்க்கருவி தோள்சுமந்தே
பூமிக்குள் வெடிபுதைப்போர்!

இவர்கள்:
பறக்கின்ற உந்துகளாம்!
பாய்கின்ற குண்டுகளாம்!
செருவுடலில் தமிழ்ஈழம்
செதுக்கிவரும் சிற்பிகளாம்!
தாயகத்தை மீட்பதற்கே
தற்கொடைக்கும் துணிந்தவராம்!
சயனட்டை அணிந்தவராம்!
சாதனையோ தனிநாடாம்!

இவர்கள்:
தாய்வாழை அழியாமல்
அடிவாழை பிழைப்பதில்லை
தாய்வயிறு வெடிக்காமல்
சேய்நண்டு பிழைப்பதில்லை
தத்துவத்தின் அடிப்படையில்
யுத்தமழை பொழிபவராம்!
சாக்காடும் பூக்காடும்
சமமென்றே ஏற்பவராம்!

இவர்கள்:
ஒப்புரவு வேடத்தால்
ஒப்பந்த நடிப்புகளால்
ஏமாற்றும் பூனையிடம்
ஏமாறும் எலிகளல்லர்!
பகைவரை விரட்டவே
புறம்பாடும் புலிகளிவர்!
தன்குருதி வண்ணத்தால்
தமிழ்ஈழம் வரைகின்றவர்!

பெண்புலிகள்!

இவர்கள்:
புகைக்குண்டை மடிசுமந்தே
பகைக்களத்தில் பாய்ந்திடுவோர்!
பூத்தொடுக்கும் கரங்களினால்
போர்வாளை ஏந்திடுவோர்!
தணியாத இவர்காதல்
தமிழ்ஈழ விடுதலையாம்!
ஈழத்தின் விடுதலைநாள்
இவர்களுக்குத் திருமணநாள்!

போர்ப்புயலில் பெண்புலிகள்
பூங்கரத்தால் ஏற்றிவைத்த
சுதந்திரத்தின் சுடர்விளக்கைச்
சுழற்காற்றே வணங்குதம்மா!
தமிழ்ப்புலிதம் குருதியிலே
தழைக்கின்ற தமிழ்ஈழம்
அகிலத்தில் ஓர்நாடாய்
அய்நாவில் அமர்ந்திடுமே!

## பிரபாகரன் தலைமையில் வெல்லடா!

**வெ**ற்றிகள் குவித்திடும் வாளடா! –அவன்
விடுதலைப் புலிகளின் தோளடா!
ஒற்றையன் என்பதே பொய்யடா! –தமிழ்
உலகமே அவனிரு கையடா!

கத்திநீ பேசுதல் வீணடா! –இனி
களபூமி போர்க்குரல் தானடா!
புத்தனிடம் போர்வாள் ஏனடா? –உன்
புறப்பாட்டில் போர்க்களம் காணடா!

ஈழமே எமதென்று கேளடா! –அதை
ஏற்காத சிங்களன் தூளடா!
வேழமே உன்வீரம் காட்டடா! –ஈழ
விடுதலை விளக்கினை ஏற்றடா!

அரபாத் யாசர்போல் நில்லடா! –பல
ஆண்டுகள் போரினைச் செய்யடா!
பேராற்று வெள்ளமாய்ச் செல்லடா! –பிர
பாகரன் தலைமையில் வெல்லடா!

## தமிழீழம் பெறுவதில்தான் களிப்பு!

**வெ**றிகொண்ட சிங்களவன்
வெட்டிவெட்டித் தமிழினத்தை
வீதியிலே குவிப்பதனைப் பாரடா! – வீர
வேங்கையெனத் தமிழ்மகனே பாயடா !

கண்ணகியின் தங்கையரைக்
கற்புநெறி மங்கையரைக்
கட்டிவைத்து வதைப்படுத்தும் பாவி!
– அவன்
கருவறுக்க அழைக்கின்றேன் கூவி!

ஆறுகோடித் தமிழ்மறவர்
ஆழ்கடலைத் தாண்டிவிட்டால்
நரிப்பிறவி சிங்களவன் தூளடா! – ஈழ
வரிப்புலியே தூக்கிடுவாய் வாளடா!

பொங்குதடா பொங்குதடா
பொன்னீழம் பொங்குதடா!
தமிழ்தம் உள்ளமெலாம் கொதிப்பு! தனித்
தமிழ் ஈழம் பெறுவதில்தான் களிப்பு!

## எழுந்தனள் சித்திரையாள் !

**ம**ங்கிடும் சூரியன் பொன்னிறம் போலவே
மாந்தளிர் காட்சிதர
பொங்கிடும் இன்னிசைப் பூங்குயில் பாடியே
போயதைத் தின்றமர
எங்கணும் பூமணம் ஏந்திய தென்றலும்
இன்புடன் தான்தவழ
மங்கையர் கூடியே வாழ்த்துக்கள் பாடவே
மலர்ந்தனள் சித்திரையாள் !

பண்ணிசை வீணையாம் பைங்கிளி கைவளை
பைந்தமி ழாமிசைக்க
அன்னமு டன்மயில் அன்றில் முதல்பல
அழகுட்ல் தானசைக்க

தன் இலை முத்தினைத் தாமரை நாயகி
தாங்கி முகமலர்த்த
வண்ண மலர்களை வஞ்சியர் தூவிட
வந்தனள் சித்திரையாள்!

வேழம னையநம் ஈழம றவரோ
வெற்றிக்கு தோள்உயர்த்த
ஈழம லர்களோ வேங்கையர் நெற்றியில்
வீரத் திலகமிட
ஈழப்ப டையினர் போர்க்கள மெங்கிலும்
ஈழக்கொ டிபறக்க
ஈழவி டுதலைக் கீதம் முழங்கிட
எழுந்தனள் சித்திரையாள் !

உணர்ச்சிக் கவிஞர் சிங்கார வேலன் - திருச்சி (தமிழ்நாடு)

யேர்மனியில்

# செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலை நடாத்தும் சோலைக் கலைமாலை

மேஜர் சுரேந்தி அரங்கில்

மலரவிருக்கும் மாபெரும் கலை நிகழ்ச்சி

கலைமாமணி

தேனிசை செல்லப்பா அவர்களின்

"இது நெருப்பின்குரல்"

கம்பீரக் குரல் விடுதலை இசை

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளை நடனக் கலைஞர்களின்

-மண்ணை மறவாதே-

விடுதலை நடனத்தொகுப்பு

ஆகிய இரு பெரும் கலை வெளிப்பாடுகள்

**இடம்:**
UNIHALLE
ALBERTEINSTEIN STR . 20
42119 WUPPERTAL

**காலம்:** 24-05-1997
17.00 மணிக்கு ஆரம்பம்

**இடம்:**
CONGRESS CENTRUM. BOBLINGEN
TUBINGER STR. 14
71032 BOBLINGEN

**காலம்:** 31-05-1997
17.00 மணிக்கு ஆரம்பம்

இங்கே அரங்கில் இசையை முழங்குவோம்!
அங்கே மழலை மகிழ நிதியை வழங்குவோம்!!
என்று அன்புடன் அழைத்து நிற்கிறோம்.

செஞ்சோலை காந்தருபன் அறிவுச்சோலை யேர்மனிக் கிளை.

# தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா
# &
# வலைப்பந்தாட்டம்

**5 மைதானங்களை உள்ளடக்கிய அதே பாரிய பூங்காவில்**

24 பாடசாலைகளுக்கு மேல் பங்கெடுக்கும் இப்பாரிய விழாவில்
- ❖ நாவூறும் தமிழீழ உணவு வகைகள்
- ❖ சிறுவர் விளையாட்டரங்குகள்
- ❖ கண்கவர் வான வேடிக்கைகள்

அத்துடன்
**£ 10, 000** பெறுமதியுள்ள
**"Vauxhall Astra"**
மோட்டார் வாகனமொன்றும்
சீட்டிழுப்பின் முடிவில் வழங்கப்படும்

காலம்: 26-05-97
( திங்கள் வங்கி விடுமுறை)
நேரம்: காலை 9.00 -
மாலை 7.30

அனுமதி சீட்டுக்கள்
தனிநபர் - £ 2.00
(குழந்தைகள் அனுமதி இலவசம்)
வாகனத்தரிப்பு - £ 3.00

இடம்




**மேலதிக தொடர்புகளுக்கு: 0171-403 4554, 0956 314 370, 0956 329 660**



# வெளிவந்துவிட்டது

**தமிழ்த்தாய் வெளியீட்டகத்தின் மற்றுமோர் வெளியீடு**

## வானம் எம் வசம்




**வாங்கிவிட்டீர்களா? உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்**

✻ தமிழர் போரியல் வரலாற்றில் வீரம் செறிந்த போர்ச்சாதனையாக உலகம் வியந்த இனிய நாட்களை பைந்தமிழில் பதிவு செய்த கவிதை நூல்.

✻ தமிழீழத்தில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும் தானே சுட்டு வீழ்த்திய நடப்பில் புளகாங்கித உணர்வோடு நடந்த உணர்வுகளை பதிவு செய்த அரிய நூல்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியகங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.



**விற்பனையாகிக் கொண்டிருக்கிறது**

# ஒளிவீச்சு
## OLIVEECHU

**யூன், யூலை, ஓகஸ்ட்- 1996**

**யூன்**
- ✻ காரைநகர் கடற்படைத்தளம் மீது கரும்புலித்தாக்குதல்
- ✻ யாழ் குடாநாட்டில் சிறிலங்காப் படை மீது தாக்குதல்கள்
- ✻ மண்ணும் மக்களும்
- ✻ நெஞ்சில் பூத்த மலர்கள்

**யூலை**
- ✻ முல்லை படைத்தளம் மீதான தாக்குதல் (ஓயாத அலைகள்)
- ✻ கிளிநொச்சி மீதான சத்ஜெய இராணுவ நடவடிக்கை

**ஓகஸ்ட்**
- ✻ திருமலை, வவுனியா, பொலநறுவையில் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள்
- ✻ சமகாலப் பார்வை

மற்றும் பல நிகழ்வுகளுடன் . . .

தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியகங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு**

# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்

## நெஞ்சம் நிறைந்த ஒன்பதாம் ஆண்டு நினைவில் அன்னை பூபதி

### இத்தாலி

கடந்த 20-4-97 ஞாயிறன்று அன்னை பூபதியின் நினைவு நாள் பி. ப. 4.30 மணிக்கு இத்தாலி பலெர்மோ மாநகரில் நினைவு கூரப்பட்டது. இந்நிகழ்வை இத்தாலி ஈழத்தமிழர் விளையாட்டுக் கழகச் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்தது.

பி. ப 4.45 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியக பிரதிநிதி திரு. து. மேதா அவர்கள் மங்கள விளக்கேற்ற, மௌன வணக்கத்துடனும் திலீபன் கல்வி நிலைய மாணவர்களின் தமிழ்த்தாய் வணக்க பாடலுடனும் விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அங்கு வருகை தந்திருந்தோரை வரவேற்று உரை நிகழ்த்திய சம்மேளனத் தலைவர் திரு. பிலிப்புராசா அவர்கள், "அற்றார் பசி தீர்த்து துயருற்றோர் துயர் துடைக்கும் பணியில் அனைத்து தமிழ் மக்களும் ஒத்துழைத்து, தமிழீழத்தில் அல்லற்படும் தமிழ் மக்களுக்கு உதவிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற கலை நிகழ்வில், முதலாவதாக மாவீரன் அன்புவின் பெயரில் இயங்கும் வடமராட்சி - அன்பு விளையாட்டுக் கழகத்தினர், புரட்சிக் கானங்களை இசைத்தனர். ஐந்து பாடல்கள், இசை ஊடே தமிழ் உணர்வலைகளை அனைத்து மக்களின் நெஞ்சை தடவிச் சென்றதை கரகோசங்கள் உணர்த்தி நின்றன.

தொடர்ந்து நாகர்கோவில் - வீமன் பேனாட் விளையாட்டுக் கழகத்தினர், "சின்ன சின்ன வீடு கட்டி..." என்ற புரட்சிப் பாடலுக்கு அபிநயம் வழங்கினர்.

இதனை அடுத்து 'புளூடைமன்ட்' விளையாட்டுக் கழகம், "பூங்காவில் சிறைகள்" என்ற நகைச்சுவை நாடகத்தையும் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து புனித பேருதுவானவர் விளையாட்டுக் கழகம், "வெள்ளைப் பூ சிவந்தது" என்ற சமூக நாடகத்தை தற்போதைய காலகட்ட நிகழ்வை உணர்த்தும் வகையில் வழங்கி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து காவலூர் - இளைஞர் விளையாட்டுக்



கழகம் "புலம்பெயர் வாழ்வில் கலாச்சாரம் மேம்பாடு அடைந்துள்ளதா? அடையவில்லையா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்றை வழங்கினர். இருதரப்பினரும் தங்கள் வாதத்திறமை மூலம் தமிழர்தம் கலை கலாச்சார சீரழிவையும் கடைப் பிடித்தலையும் கூறினர்.

இதனைத் தொடர்ந்து மணல்காடு - சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வழங்கிய 'சோலையம்மா' சமூக நாடகம் நடைபெற்றது. தமிழீழ போராட்ட வரலாற்றில் இடம்பெறும் உண்மைகளை படம்பிடித்துக் காட்டிய கலைஞர்கள் நிகழ்வுக்கு வந்திருந்தவர்களின் கண்ணீரை வரவழைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, இத்தாலிக் கிளைப் பிரதிநிதியின் உரை இடம்பெற்றது. அவர் தனது உரையில், புலம்பெயர் மண்ணில் வாழும் தமிழ் மக்கள் தாய் நாட்டுக்கு எந்த வழிகளில் வலுவும் உறுதியும் சேர்க்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும் என்றும் இவ் நினைவு நாளில் பங்குகொண்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களும் விளையாட்டுக்களில் ஆர்வமாக இருப்பதுபோல் தேச விடுதலையிலும் எவ்வளவு பற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதை தமது நாடகங்கள் மூலம் மக்களுக்கு காட்டியுள்ளனர் என்றும் எதிர் காலத்தில் மேற் கொள்ளப் படவுள்ள செயற் திட்டங்கள் பற்றியும் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் 'வழிகாட்டிகள்' புதிய வடிவில் சமூக நாடகம் ஒன்றை வழங்கினர். மாவீரர்கள் நாதன், கஜன் ஆகியோருக்கு சமர்ப்பணமாக்கப்பட்ட இந் நாடகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற யூத மக்கள் விடுதலைப் போரை தமிழீழ மக்களின் விடுதலைப் போரோடு ஒப்பிட்டுக் காட்டியது.

இதனைத் தொடர்ந்து அன்பு பறவை விளையாட்டுக் கழகம் 'வேலை தேடுவோம்' என்ற நகைச்சுவை நாடகத்தை வழங்கி மக்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தனர்.

இறுதியாக நன்றியுரையுடன் இரவு 11.30 மணிக்கு அனைத்து நிகழ்வுகளும் நிறைவுற்றன. ✷

## அன்னை பூபதியின் ஒன்பதாவது நினைவுநாள்

### யேர்மனி

**19-04-1997** சனிக்கிழமையன்று, யேர்மனியின் எசன் நகரப் பல்கலைக்கழக மண்டபத்தில் 17.00 மணிக்கு அன்னை பூபதி நினைவெழுச்சி நாள் எழுச்சியுடன் நடாத்தப்பட்டது. இதில் 1500ற்கும் அதிகமானோர் கலந்துகொண்டு அன்னை பூபதியின் நினைவிற் சங்கமித்தனர்.

காலை 9.00 மணிக்கு ஆரம்பித்த அன்னை பூபதி நினைவுக் கவிதைப் போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடாத்தப்பட்டன. பல சிறந்த கவிதைகள் இந்தப் போட்டியின்போது படிக்கப்பட்டு பரிசினைத் தட்டிக்கொண்டன. கவிதை எழுதும் திறன் ஆர்வத்துடன் வளர்க்கப்படுவது, இந்தப் போட்டியின்போது வெளிப்பட்டது.

அமைதி வணக்கத்துடன் ஆரம்பித்த கலை நிகழ்ச்சிகளின்போது, அன்னை பூபதியை நோக்கிய விடுதலைப் பிரார்த்தனையும் அதனையடுத்து கவிதைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. பரிசுகளை உலகத்தமிழர் இயக்கம் - யேர்மனியின் பொறுப்பாளர் திரு. காங்கேய மூர்த்தி, கல்விப்பணிப் பொறுப்பாளர் திரு. நாகலிங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. ஆனந்தராஜா ஆகியோர் வழங்கினர். விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளையின் நடனக் கலைஞர்கள் வழங்கிய நடனங்களும் பரிசுக் கவிதைகளும் மேடையேறின. கண்ணனின் இசையமைப்பில் வ. க. அற்புதராணி எழுதி நடன வடிவமைத்து ஆடிய 'புதியபிறப்பு' என்ற நாட்டியம் பலரது பாராட்டையும் பெற்றது. நான்கு வயதுச் சிறுமி மழலை மொழியில் படித்த கவிதை கரகோசத்துக்கிடையில் நிறைவுற்றது. விடுதலையை முன் வைத்துப் புதிய யுக்திகளுடன் படிக்கப்பட்ட கவிதைகள் உணர்வையூட்டின. தமிழீழ விடுதலைப் புலிகள் - யேர்மனிக் கிளையின் வெளியீடாக 'தமிழீழப் பாடல்கள்-2' என்ற தாயகப் பாடல்களின் இரண்டாவது தொகுப்பு ஒளிப் பேழையாக வெளியிடப்பட்டது. நமது சொந்த மண்ணிலே விடுதலை நெருப்பை அனன்று நிற்கும் நமது உடன் பிறப்புக்களின் வேகத்தையும் சிங்கள இனவாத அரசின் காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலையையும் பிரதிபலித்து நிற்கும் உண்மையின் விம்பமான அந்தக் கலைத் தொகுப்பை, விடுதலைப் புலிகளின் டியூரன் நகரப் பிரதிநிதி ஆறுமுகம் அவர்கள் வெளியிட்டு வைக்க, பிறிமன் நகரப் பிரதிநிதிகளில் ஒருவரான கந்தசாமி அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளைத் துணைப்பொறுப்பாளர் திரு. கண்ணன் அவர்களின் 'சுதந்திரத் தமிழிசை விருந்து' மண்டபத்தை நிறைத்து விடுதலைப் பக்தியைப் பரவ விட்டது. பக்க வாத்தியமாக இசைந்து முழங்கிய மிருதங்கத்தை வித்துவான் பிரணவநாதன் அவர்களும் கடத்தை கமலநாதன் அவர்களும் முகர்சிங்கை சிவரூபன் அவர்களும் தம்புராவை திருமதி கண்ணன் ஷோபா அவர்களும் வாசித்துச் சிறப்பூட்டினர். விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் சிவநாதன் அவர்



கள் பேசுகையில், "வீணான சந்தேகங்களால் இந்தியா, ஈழத் தமிழர்களை வஞ்சித்து வந்துள்ளது. இந்தப் போக்கால் பல முக்கியமானவர்களை நாம் பறி கொடுத்துள்ளோம். நீதிக்குப் புறம்பான பிழையான பார்வையை இனியும் மாற்றாவிட்டால், உலகத்தின் முன் இந்தியா தலை கவிழவேண்டி வரும்" என்றார். இறுதியாக அண்ணாவியார் எலியாஸ் பிள்ளையின் ஆக்கத்தில் உருவான 'வன்னியன் வருகிறான்' என்ற நவீன நாட்டுக்கூத்து இடம்பெற்றது.

நிகழ்ச்சிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக அறிவிப்பாளர் எல். வலன்ரையின் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற உணர்ச்சிக் கோசத்துடன் நிகழ்வு நிறைவுற்றது. ✷

## சிறுகதை

# நான் நலம்; மீதி நேரில்!

– யோ. மைதிலி – (தமிழீழம்)

"அன்பின் அப்பா அம்மா அக்கா பிள்ளைகள் யாவருக்கும் எழுதிக் கொள்வது, நான் சுகமே உள்ளேன். தங்கள் நலனுக்கும் முதலைக்குழி முருகன் அருள்புரிவாராக. மேலும்........"

பேனா அதற்குமேல் எழுது தாளில் ஓட மறுக்கிறது. எதை எழுதுவது? எப்படி எழுதுவது?

ஏராளமான விஷயங்கள் மனதுக்குள் எழுந்து குமுறித் தனித்தனியாக எழுந்து



நிற்பதும், ஒன்றுடன் ஒன்று பிணைபட்டு மோதித் தெறித்து, சிதைந்து போவதுமாக மனம் குழப்பத்தால் நிறைக்கப்படுகின்றது.

''கடிதம் எழுதுவது எப்படி'' என்று, எட்டாம் வகுப்பில் பொன்னையா வாத்தியார் சொல்லித் தந்தவை இன்னும் அவன் மனதில் பசுமையாக நிற்கின்றன. ஆனால், அவையெல்லாம் இன்று இக்கடிதத்தை எழுத ஏன் உதவ மறுக்கின்றன? "எமது வாழ்வும் கல்வி முறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றே இருக்கின்றன'' என்று யாரோ சொன்னது உண்மையாக இருக்கும் எனவும் ஒரு எண்ணம் அவன் மனதில் எழுந்து மறைகின்றது.

காலில் ஏதோ ஊருவது போன்ற உணர்வு; திடுக்கிட்டு எழுந்து உள்ளங்காலைப் பார்க்கிறான் அவன். எதுவுமில்லாததால் மனம் சற்று நிம்மதியடைகின்றது. நைந்துபோன பாயின் மூலையில் கிளம்பிக்கிடந்த ஒரு ஓலைதான் அவன் உள்ளங்காலை வருடியிருக்க வேண்டும் என்ற எண்ணம் அங்கு உலவும் முன்பின் அறியாத ஜீவராசிகள் பற்றிய பயத்தைப் போக்க, மீண்டும் பாயில் முகங்குப்புறப் படுத்துக் கொள்கிறான். தலையைத் தாங்க வேண்டிய தலையணை நெஞ்சுக்கும் பாய்க்கும் இடையில் ஒரு உயரத்தை ஏற்படுத்த, பாயின் நுனியில் வைத்திருந்த எழுதுதாள் மீது உறங்கிக் கொண்டிருந்த பேனாவை அவன் மீண்டும் கையிலெடுக்கிறான்.

மீண்டும் எதை எழுதுவது என்ற பிரச்சினை பூதாகரமாக எழுந்து நிற்கின்றது.

> ஊரிலுள்ள உறவுகளைச் சுற்றிலும் ஒரே பாம்புகள். அவை இங்குள்ள பாம்புகளைப்போல் புற்றுக்குள் ஒளித்து வாழ்வதில்லை. சுதந்திரமாகத் திரிகின்றன. யாரையும் எந்நேரமும் தீண்டலாம். சில சமயங்களில் அப்படியே முழுதாகவும் விழுங்கி விடலாம்.

கடிதத்தில் எழுதும் விஷயங்கள் சில சமயங்களில் கொடிய பூகம்பமாயும் உருவெடுக்கலாம்; ஆள்விழுங்கிப் பேயாகவும் மாறலாம் அல்லது யாராவது ஒருவரைக் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கவும் செய்யலாம்.

வீட்டிற்கு முன்னால் நின்ற பாலைமரத்தில் கண்களிற் படாமல் குடியிருந்து சீழ்க்கை அடிக்கும் சில்வண்டின் ஒலி காதைத் துளைக்கிறது. பாலை மரத்திற்குக் கீழ் மலைச் சிகரங்களைப்போல் ஒழுங்கற்று வளர்ந்து கிடந்த புற்றுகளை வெட்டிச் சமன்படுத்திக் கொண்டிருந்தபோது சீறிப்பாய்ந்த பாம்பை மண்வெட்டியால் அடித்துக் கொன்றது ஏனோ நினைவுக்கு வருகின்றது. கண்டங்கருவளை– அடுத்த கொட்டிலில் குடியிருக்கும் ராமையா, "ஒரு கண்டங்கருவளையை அடித்தால் ஏழு பாம்புகள் வரும்" என்று சொன்னதும் உண்மையாயிருக்கும் போலவும் தோன்றியது. ஏதோ ஒரு சிறு தகரப் பேணியை எடுத்து சைக்கிற் 'வால்வ்' கட்டையை அதன் மூடியில் செருகித் திரிபோட்டுக் கொழுத்திய அக்கைவிளக்கின் ஒளியில் குடிசையின் மூலை முடக்குகளைப் பார்த்தான். ஆனால், கிடுகுச் செத்தைக்குள்ளும் பாம்புகள் இருக்கக் கூடும் என்ற பயமும் இடைமிடையே தோன்றாமலில்லை.

பாம்புகளும் நுளம்புகளும் மழையும் காட்டு வாழ்வும் மனதை அலைத்த போதிலெல்லாம் அவன் பலசமயம் 'சலிப்புக்குள்' தள்ளப்படுவதுண்டு. அப்படியொருநாள் மனஞ்சோர்ந்து கதைத்துக்கொண்டிருந்தபோதுதான் சிவலிங்கம் சொன்னான், ''மச்சான் வவுனியாவுக்குப் போய் அதாலை திருகோணமலையிலை கப்பலேறி யாழ்ப்பாணம் போகலாமாம்"

பிறந்த மண்ணுக்குப் போக, உறவுகளுடன் கூடி வாழ யாருக்குத்தான் ஆசையில்லை?

அவன் சிவலிங்கத்தை நிமிர்ந்து பார்த்தான்.

மாயமானாகக் காட்டுக்குள் வந்து இராமனை எங்கெங்கோவெல்லாம் கொண்டலைந்த மாரீசனின் ஞாபகம் வந்தது. சீதை, இராமன் கீறிய கோட்டைத் தாண்டவில்லை. அவனது குடும்பத்தினரும் தங்களுக்குத் தாங்களே கீறிய கோட்டைத் தாண்டவில்லை. என்றாலும் இப்போ இருபகுதியினரும் அசோகவனத்தில்!

இராமன் தானும் போய் அசோக வனத்திற்குள் மாட்டுப் பட்டிருந்தால் எப்படியிருக்கும் என்பதை நினைத்த போதே பயம் மனதை உலுப்பியது.

ஒரு பெரும் காவியமே இல்லாமலல்லவா போயிருக்கும்.

விஷப்பாம்புகள் எவ்வளவோ பரவாயில்லை போலவும் தோன்றுகின்றது. பாம்பு கடித்தால் வைத்தியம் செய்யலாம். உயிர் தப்பவும் முடியும். சாகவேண்டியும் ஏற்படலாம். செத்துப்போனாலும் உறவுகள், ஊரவர்கள் அழுது ஒப்பாரி வைத்து ஊர்வலமாகக் கொண்டுசென்று சிதையில் வைத்துத் தீ மூட்டி எரிக்கலாம். ஆனால், ஊரிலுள்ள உறவுகளைச் சுற்றிலும் ஒரே பாம்புகள். அவை இங்குள்ள பாம்புகளைப்போல் புற்றுக்குள் ஒளித்து வாழ்வதில்லை. சுதந்திரமாகத் திரிகின்றன. யாரையும் எந்நேரமும் தீண்டலாம். சில சமயங்களில் அப்படியே முழுதாகவும் விழுங்கி விடலாம்.

ஏனோ இந்நேரத்தில் அவனுக்கு அவனுடைய பூட்டி, சிறுவனாயிருக்கும்போது சொன்ன கதை நினைவுக்கு வருகின்றது. கோட்டை முனியப்பரிலிருந்து புறப்படும் முனி, தன் பரிகலங்களுடன் வல்லைவெளிக்கு வந்து, உப்புவெளி தாண்டி, உயிலங்கன்றடியில் இளைப்பாறி தங்களது ஒழுங்கையால் பருத்தித்துறையைச் சென்றடையுமாம். ஒழுங்கை என்று சொல்லப்படும் அந்த வெள்ள வாய்க்கால் பரிகலங்கள் 'செம்மறி ஆட்டு' உருவத்தில் செல்லுமாம். இதில் உள்ள ஆபத்து என்னவென்றால், இந்த முனி ஊர்வலத்தின்போது யாராவது குறுக்கே வந்தால் முனி அடித்துவிடும். அடிவாங்கியவர் இரத்தம் கக்கிச் சாகவேண்டியதுதான்.

பூட்டி, இந்தக் கதையைத் திருப்பித் திருப்பிப் பலமுறை சொன்னாலுங்கூட அவன் 'காக்கிவளவு' பெரியம்மாவின் செம்மறி ஆடுகளைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை. அதனால் அவன் சிறுவயதில் முனியை நினைத்துப் பயந்தாலும் காலப் போக்கில் அவையெல்லாம் நம்பமுடியாத கதைகளாக அவனளவில் மாறி விட்டிருந்தன.

இப்போ பரிகலங்களின் ஊர்வலம் பற்றிய நம்பிக்கை சிறிது சிறிதாக மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது. முன்னைய பரிகலங்களுக்குக் குறுக்கே போனால் மட்டும்தான் ஆபத்து. இப்போதெல்லாம் பரிகலங்கள் வீடுகளுக்குள் புகுந்து மனிதர்களை இழுத்துச் செல்வதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. வேம்படி வீட்டு வெள்ள வாய்க்காலால் பரிகலங்கள் மணலை வாரியிறைத்துப் புழுதிப் படலமாகக் கிளப்பிக்கொண்டு செல்வது அவன் மனதில் தெரிகின்றது.

எப்படியும் இன்று கடிதத்தை எழுதி முடித்துத் தபாலில் சேர்த்துவிட வேண்டும் என்ற வலுவான எண்ணம் அடி மனதிலிருந்து விடாப்பிடியாகக் கெம்பிக்கொண்டிருக்கின்றது.

அவன் எவ்வளவு சிரமப்பட்டு அதை எழுதினாலும் இடைவெளியில் அதன் வாய் கிழிக்கப்படும். எழுத்தெழுத்தாக வாசிக்கப்பட்ட பின்பு விலாசதாரருக்கு சிலவேளைகளில் போய்ச் சேரும். ஆனால், போய்ச் சேருவதை எவ்விதத்திலும் நிச்சயப்படுத்தி விடமுடியாது.

அவன் இதுவரை மூன்று கடிதங்கள் போட்டுவிட்டான். பதில் கடிதம் ஒன்றுகூட வரவில்லை. போய்ச் சேராமலும் இருக்கலாம். சிலவேளை போய்ச் சேர்ந்தாலும், அவனது உறவுகள் கடிதம் போடுவதில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை எண்ணிப் பதில் போடாமலும் இருந்திருக்கலாம். எப்படியிருப்பினும் தொடர்புகள் அறுந்து, தனித்தனித் தீவாகி மனிதர்கள் தவிப்பது மட்டும் நிதர்சனமானது.

ஆங்கிலேயர் நமது நாட்டைக் கைப்பற்றிய பின்புதான் தபால் போக்குவரத்து இங்கு ஏற்பட்டதாகப் படித்திருக்கிறான். என்றாலும், அன்னத்தைத் தூதுவிட்டதும் ஒருவருக்கொருவர் ஓலை அனுப்பித் தகவல்களைப் பரிமாறிக் கொண்டதும் இலக்கியங்களில் படித்தது நினைவுக்கு வந்து போனது. அதிலும் அக்பர் ஆட்சிக் காலத்தில் அவருக்குக் குழந்தை பிறந்த செய்தி ஒரு மைலுக்கு ஒரு முரசம் வைக்கப்பட்டு அதில் எழுப்பப்படும் ஒலி மூலம் நூற்றுக் கணக்கான மைல் தொலைவிலிருந்த அவருக்கு அறிவிக்கப்பட்டதாம்.

அப்படியானால், குடாநாட்டிற்குள் நடக்கும் கொலைகள், கைதுகள், காணாமற் போதல்கள் எப்படிப் பரவுகின்றன. அக்பரின் முறை நடைமுறைக்கு வந்து விட்டிருக்கலாம் என அவனுக்குத் தோன்றியது. முரசிலிருந்து முரசிற்குச் செய்தி போனதுபோல் காதிலிருந்து காதுக்குப் போகக்கூடும்.

ஆனால், அவனும் அவனுடைய உறவுகளும், இப்போ தொடர்புகொள்ள, உடைக்கப்படும் – போய்ச்சேராத கடிதங்களையே நம்பவேண்டியுள்ளது. கிளாலிக் கடலேரியும் ஆனையிறவுத் தளமும் குறுக்குச் சுவராக இல்லாமலிருந்தால் வேறு ஏதாவது ஒரு வழியிலாவது முயற்சிக்கலாம்.

காந்தனை நினைக்கும் போது இனம் புரியாத பதட்டம் ஒன்று ஏற்படுவதையும் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொள்வதையும் அவனால் உணர முடிந்தது. காந்தன் வேறுயாருமல்ல. அவனுடைய சகோதரியின் மகன்தான்.

தகப்பன் வெளிநாட்டிலிருந்து காசுகாசாக அனுப்ப தாய் ஊட்டி, ஊட்டி வளர்த்த உடம்பு. படிப்பிலும் அவன் கெட்டிக்காரன். பள்ளிக்கூடம் போய்வருகிறானா என்பது பற்றி எவ்வித விபரமும் தெரியவில்லை. சிலவேளை காணாமற் போயிருந்தால்..........

அப்படி நடந்திருக்காது என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான். தற்செயலாய் அப்படி நடந்திருந்தால் கடிதம் வராமலிருப்பதே அதாவது துன்பம் விளைவிக்கும் சம்பவங்களை அறியாமல் இருப்பது கூட நல்லதுதான்.

அது 1984ஆம் ஆண்டு என ஞாபகம். உப்புவெளியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது. அடுத்த நாள் அதிகாலையில் அந்த ஊரையே சுற்றிவளைத்துப் பலரைப் பிடித்துக் கொண்டு சென்றுவிட்டனர். அவர்களுக்கு என்ன தோன்றியதோ வெற்றிகாட்டுப் பிள்ளையார் கோவிலில் மணியடிக்கும் சண்முகலிங்கத்தை மட்டும் ஓட விட்டுவிட்டு முதுகில் சுட்டுக் கொன்றுவிட்டனர். அது சிலவேளைகளில் கண்ணிவெடி வைத்தவனைத் தாம் சுட்டுவிட்டதாக மேலிடத்திற்கு அறிவிப்பதற்காகக் கூட அக்காரியத்தைச் செய்திருக்கலாம். அது அன்று வந்த

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

# நான் நலம்...

பொறுப்பதிகாரியின் மனநிலையைப் பொறுத்தது.

காந்தனையும் ஓட விட்டுவிட்டுப் பின்னால்........ இருக்காது, அப்படி நடந்திருக்க முடியாது. காந்தன் நன்றாக ஓடுவான். இன்றுவரை நூறு மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அவன் நிலைநிறுத்திய பாடசாலைச் சாதனையை எவரும் உடைக்கவில்லை.

துப்பாக்கி ரவையின் வேகத்தைவிட மனிதனால் ஓட முடியுமா? முடியாதுதான்......... ஆனால், காந்தன் ஓடியே ஆகவேண்டும் என்று அவன் மனம் துடிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் எண்ணூற்று நாற்பத்தாறு பேர் காணாமற் போனதாக அரச அதிபர் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். அது எண்ணூற்று நாற்பத்தைந்தாக இருந்தால் எவ்வளவு நன்றாமிருக்கும்?

சுஜியும் பருத்தித்துறைக்கு வேலைக்குப் போகவேண்டும். 'குஞ்சன் கடைச் சந்தி' தாண்டி, மூத்தவிநாயகர் கோவிலடியால் போய், நெல்லியடிச் சந்தியில்.......... சந்திக்குப் போகாமல் 'மகாத்மா தியேட்டர்' முன் ஒழுங்கையால் இறங்கி சாணக்க மூலைக்குள்ளால் சென்று வதிரிப் பாதையாலும் போகலாம். அப்படிப் போகும்போது புளியடிச் சந்தியில் மண் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தால் என்ன செய்வது?

கூடப் பிறந்த சகோதரியின் மகள் என்றாலும் கூட, சுஜியின் அழகையிட்டு அவனுக்குத் தனிப் பெருமை. அந்தக் குறுகுறுத்த கண்களும் படபடக்கும் விழி மடல்களும் நிச்சயமாக மண் மூடைக்குள் நிற்கும் கண்களை அவள்

> அனுமான் எப்படிக் கடலைத் தாண்டியிருப்பான்.........?
> அப்படியே வானத்தில் எழுந்து பறந்து சென்று தாயையும் தகப்பனையும் சகோதரியையும் பிள்ளைகளையும் தோளில் சுமந்துகொண்டு பறந்து வந்துவிட வேண்டும் போலொரு தவிப்பு மனதில் எழுகின்றது.

பின்னால் விரட்டும் என்பதில் சந்தேகமேயில்லை. வேலைக்குப் போன சுஜியைக் காணவில்லை என்று தேடிப் போன அக்காவும் சுஜியுடன் ஒரே புதைகுழியில் அழுகி, நாறிப் போய், புழுக்களாய் நெளிய.........

நெஞ்சுக்குள் ஏதோ ஒரு உணர்வு உருண்டு, திரண்டு மூச்சை அடைக்கிறது. அனுமான் எப்படிக் கடலைத் தாண்டியிருப்பான்.........?

அப்படியே வானத்தில் எழுந்து பறந்து சென்று தாயையும் தகப்பனையும் சகோதரியையும் பிள்ளைகளையும் தோளில் சுமந்துகொண்டு பறந்து வந்துவிட வேண்டும் போலொரு தவிப்பு மனதில் எழுகின்றது.

எனினும் அனுமானையும் நடுக்கடலில் அரக்கி தடுத்து நிறுத்திய சம்பவமும் அவன் நினைவுக்கு வராமலில்லை.

அவனால் இனியும் கடிதத்தை எழுதாமல் இருக்கவே முடியாது. பேனையை மீண்டும் கையில் எடுக்கிறான்.

பிள்ளையார் கோவில் ஒலிபெருக்கி 'பெருங்கதை' படிக்கும் யாரோ ஒருவரின் குரலைக் கர்ணகடூரமாக்கிக் காதைக் கிழிக்கிறது. ஒலிபெருக்கியைக் கண்டுபிடித்தவனைச் சுண்ணாம்புக் காளவாயில் போட வேண்டும் போலிருக்கிறது.

அவன் ஊரைவிட்டு கல்வி காரணமாகவோ, தொழில் காரணமாகவோ ஊர் எல்லை தாண்டிய காலம் தொட்டு அவனது தாய் 'பெருங்கதை' விரதம் பிடிக்கத் தவறுவதில்லை. அந்த விரதம் அவனுக்கு ஒரு துன்பமும் வராமல் காப்பாற்றும் என்பது அவளது அசையாத நம்பிக்கை. இந்தப் பெருங்கதை விரத காலத்தில் அவனது கடிதம் கிடைக்குமானால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்.

பெருமூச்சு ஒன்று நெஞ்சுக்குள் இருந்து எழுந்து அடங்குகின்றது. அழுதால் கொஞ்சம் மனதுக்கு நிம்மதியாமிருக்கும் போலவும் தோன்றுகின்றது.

அசோகவனத்தில் சிறைப்பட்டிருந்த சீதையை எண்ணி ராமன் விம்மி அழுதிருப்பானா? இல்லையே......... படை திரட்டி, கடலுக்குப் பாலம் போட்டு, யுத்தம் செய்தல்லவா சீதையை மீட்டான். அப்படிச் செய்திருக்காவிடில் இராமன் சாகும்வரை பஞ்சவடிக் காட்டில் அலைந்து கொண்டல்லவா இருந்திருக்க வேண்டும்.

கிளாலிக் கடலுக்குப் பாலம் போட முடியுமா? கேள்வி எழுந்த கையுடனேயே பாலக் கற்களாய் விழுந்துபோன ஆயிரக்கணக்கான உயிர்களின் எக்காளச் சிரிப்பொலி நெஞ்சை அதிர்க்கிறது.

மிக வேகமாகப் பேனையைக் கையில் எடுக்கிறான். இப்போது கடிதம் எழுதுவது எப்படி என்பது, குழப்பங்களைத் தாண்டி திட்டவட்டமான வசனங்களாக உருப்பெற்றுவிட்டது.

"எனக்கு நீங்கள் கடிதங்கள் போடவேண்டாம். நாங்கள் வெகு விரைவில் உங்களிடம் வந்து விடுவோம்" ✳

# தாயக விடுதலைக்காக வீரச்சாவடைந்த மாவீரர் விபரம்

ஜனவரி 21ஆம் திகதி காரைநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் கப்டன் பழனியப்பன் (திருநாவுக்கரசு தருனேஸ்வரன், யாழ்ப்பாணம்) வீரச்சாவடைந்துள்ளார்.

மார்ச் மாதம் 23ஆம் திகதி, கோண்டாவில் பகுதியில் இராணுவச் சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் மேஜர் வசீ (நவரத்தினம் சிவக்குமார், யாழ்ப்பாணம்) வீரச்சாவடைந்துள்ளார். இதே மாதம் 31ஆம் திகதி, அளவெட்டிப் பகுதியில் சிறிலங்காப் படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் கப்டன் சந்தோசம் (சுவாமிநாதபிள்ளை, சிதம்பரன், அளவெட்டி), 2ஆம் லெப். கலையரசன் (அன்ரனி ஜோன்போல், இளவாலை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதி, கொக்குவிலில் சிங்கள இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கப்டன் வெள்ளை வீரச்சாவடைந்துள்ளார்.

வவுனியா நகர் பகுதியில் இராணுவத்தின் சுற்றிவளைப்புக்குள் சிக்கிய நிலையில் லெப். ரவிச்சந்திரன் (முத்துராமலிங்கம் ரமேஸ்கண்ணா, கிளிநொச்சி) சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்துள்ளார். ✳

# சிங்களக் குடியேற்றங்கள் விரைவுபடுத்தப்படுகின்றன

திருகோணமலையில் இந்து நம்பிக்கை அறக் கட்டளையின் கீழுள்ள காணிகள் சிறிலங்கா அரசால் சுவீகரிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறே மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப் பகுதியிலும் தமிழர் அல்லாதோரின் ஊடுருவல் அதிகரித்து வருவதாக சிறிலங்காப் பாராளுமன்ற மட்டக்களப்பு பிரதிநிதி யோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். சமீபகாலமாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தாயகத்தில் சிறிலங்கா அரசால் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. ✳

# யாழ் புனரமைப்பு.....

அபிவிருத்திப்பணி முடக்கி விடப்பட்டதாகப் பிரச்சாரம் தொடர்ந்தது. ஆனால், யாழ் மாவட்ட அரச ஏஜெண்ட் தற்பொழுது தெரிவித்துள்ள ஒப்புதல் வாக்குமூலமானது, அரசாங்கம் யாழ் குடாநாட்டின் அபிவிருத்தியை மட்டுமல்ல புனரமைப்பு நடவடிக்கைகளைக் கூட மேற்கொள்ளத்தயாராக இல்லையென்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. ஆனால், அடிக்கடி யாழ் புனரமைப்புப் பற்றியும் அபிவிருத்தி பற்றியும் பிரச்சாரம் செய்யும், அரச கட்டுப்பாட்டிலுள்ள வானொலி, தொலைக்காட்சி என்பன பெரும் வளர்ச்சி நோக்கி முன்னேறிச் செல்வதாகவே இருக்கின்றது. ஆனால் இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், யாழில் உருளைக்கிழங்கு விளைவிக்கப்படும் என்பதும் யாழில் பாடசாலைகள் இயங்குவது என்பதும் அரசின் மிகப்பெரிய அபிவிருத்திப் பணிகள் எனக் காட்டவிளைவதுதான். ஆனால், யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு விளைவது புதுமையும் அல்ல. பாடசாலைகள் இயங்குவது ஆச்சரியமானதும் அல்ல. ஏனெனில், யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த போதும் பொருளாதாரத் தடை தீவிரமாக இருந்த போதும் கூட இவையெல்லாம் சாதாரணமாக நடந்து கொண்டிருந்தவைதான்.

இந்த வகையில், யாழ் குடாநாட்டை அது பிரச்சாரத்தினால் அபிவிருத்தி செய்ய முனைந்ததேயொழிய எந்த விதத்திலும் அங்கு புனரமைப்புப் பணிகளில் அது ஈடுபடத்தயாராக இருக்கவில்லை. இதற்கு அரசாங்கத்திடம் நிதியில்லை என்பதோ அன்றி செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை என்பதோ காரணம் அல்ல. உண்மையில் அரசாங்கத்திற்கு அவ்விடயத்தில் அக்கறையில்லை, மனமில்லை என்பதே உண்மையாகும். ஆனால், யாழ் அபிவிருத்தி பற்றி அரசாங்கம் தொடர்ந்து பேசுவதற்கு தனியாக அரசியல் இலாபம் மட்டும்தான் காரணமல்ல. யாழ் அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகை நிதியைப் பெற்றுக்கொள்வதும் நோக்கமாகும். இந்த நோக்கமானது ஓரளவு நிறைவேறியும் வருகின்றது. யாழ் அபிவிருத்திக்கென கணிசமான நிதி அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து கிடைத்தும் வருகிறது.

இந்த வகையில், யாழ் அபிவிருத்தி என்ற பேச்சே அரசாங்கத்திற்கு ஒருவகை நிதி சேகரித்தல் நடவடிக்கையேயாகும். அதே சமயம், தமிழ்க்குழுக்களுக்கு தமது பைகளை நிரப்பிக் கொள்ளும் ஒரு வழி முறையாகவும், சிறிலங்காவுக்கு சந்திரிகா அரசு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த நிதி வழங்க ஒரு ஊடகமாகவே உள்ளது எனலாம். ✳

நன்றி : ஈழநாதம்

# சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக .......

பேச்சுவார்த்தை நடத்தினால் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கவேண்டும் என்று பேரினவாத அரசு அஞ்சுகின்றது. இந்த உண்மையை மறைப்பதற்காகப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பு என்று உலகுக்குக் காட்டி, அதன் வாயிலாகப் புலிகளுடன் பேசுவதைத் தவிர்ப்பதிலும் இனப் பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்ற பரிமாணத்துள் அடக்கி வெளிநாட்டு மத்தியஸ்துவங்களைத் தட்டிக்கழிப்பதிலும் சந்திரிகா அரசு குறியாக நிற்கின்றது. எது எப்படி இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சந்திரிகா அரசு இராணுவத் தீர்வையே இப்போதும் வைத்திருக்கின்றது. இராணுவப் பலத்தின் மூலம் புலிகள் இயக்கத்தை நசுக்கிவிட்டு, இலகுவில் விலைபோகக் கூடிய தமிழ்க் குழுக்களைத் தமிழரின் ஜனநாயகப் பிரதிநிதிகளாக அரசியலில் அங்கீகரித்து, அவர்களுடன் பேசி தமிழினத்தின் அடிமைச் சாசனத்தை அவர்களைக் கொண்டு எழுதுவித்து, இனப்பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்கமுடியும் என்ற கற்பனையிலேயே சிங்கள அரசு காலத்தைக் கழிக்க விரும்புகின்றது. அதற்காகப் "போர்மூலம் சமாதானம்" என்ற தனது கொள்கையைத் தொடர்ந்து அமுல்படுத்த இருக்கின்றது. இந்தவகையில் அடுத்த படையெடுப்பிற்குமான ஆயத்தங்களை அது செய்கின்றது என்பதே இன்று யதார்த்தமும் ஆகும்'' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ✳

நன்றி : ஈழநாதம்

# போரும் பொருண்மியமும்

## பரம்பரை அலகுகள் மாற்றப்பட்ட பயிர்கள்

## (Genetically modified crops)

அண்மைக் காலங்களில் மேற்கு நாடுகளில் எதிர்பார்க்கப்பட்டதை விட வேகமான கதியில் பரம்பரையலகு மாற்றப்பட்ட பயிர்கள் விவசாயத்தில் ஈடுபடுத்தப்படத் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் பல அனுகூலங்களை விவசாயிகளும் பாவனையாளர்களும் அடையக் கூடியதாகவுள்ளது. இம்முறையினால் கிடைக்கப்பெறும் பயன்பாடுகள் பற்றி இலகுவில் விழங்கிக் கொள்ள, முதலில் இரு உதாரணங்களை இங்கு விவரிப்பது பொருத்தமாக அமையும்.

### நீண்ட நாட்கள் அழுகாதிருக்கக் கூடிய தக்காளி

தக்காளிச் செடியின் கலங்களில் ஏறத்தாழ 38,000 பரம்பரையலகுகள் (Genes ) உள்ளன. ஒவ்வொரு தாவர அல்லது விலங்கினத்திற்கும் இத்தொகை வேறுபட்டதாகவிருக்கும்.. இப் பரம்பரை அலகுகளே மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் இரு தாவரங்களின் இயல்புகளை அடுத்த சந்ததிக்குக் கடத்த உதவுகின்றன. இயல்புகள் என்று குறிப்பிடும்போது தாவரத்தின் வெளித்தோற்றம், அதன் உடற்றொழிலியல்புகள், நோய் எதிர்ப்புத் தன்மை, விளைச்சல் வீதம், மண்ணின் வேறுபட்ட அமில, காரத்தன்மைகளைத் தாங்கும் தன்மை, அறுவடை செய்யப்படும் பாகத்தின் நிறம், பருமன், சுவை போன்ற பலவற்றைக் கூறிக்கொண்டே போகலாம். இவை ஒவ்வொன்றும் ஒரு பரம்பரை அலகால் அல்லது கூட்டாகச் சில பரம்பரை அலகுகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன. தக்காளிச் செடியின் 38,000 பரம்பரையலகுகளில் தக்காளிப்பழம் செடியிலிருந்து அறுவடை செய்யப்பட்டதிலிருந்து பழுப்பதற்கெடுக்கும் நாட்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் பரம்பரையலகும் ,பழுத்த நிலையில் பழம் இருக்கும் நாட்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் பரம்பரையலகும் என இரண்டு பரம்பரையலகுகளை விஞ்ஞானிகள் நுட்பமாகத் தரம்பிரித்து அறிந்து அவையிரண்டையும் அநுகூலமான வேறு இரண்டு அலகுகளால் மாற்றீடு செய்து ஒரு புதுவகையான தக்காளி மரத்தை உருவாக்கியுள்ளார்கள். இவ்விதம் உருவாக்கப்பட்ட தக்காளி பெருமளவில் இப்போது ஐரோப்பிய நாடுகளில் பயிரிடப்பட்டு விற்பனைக்கும் வரத்தொடங்கிவிட்டது. பழத்தின் தோற்றத்திலோ, சுவையிலோ எந்த வித்தியாசமும் காணமுடியாது. ஒரேயொரு வித்தியாசம் அவை நீண்ட நாட்கள் அழுகாமல் கடைகளிலிருக்கும். அத்தோடு நீண்ட நாட்கள் பழுக்காமல் காயாகவேயிருப்பதால் வயல்களிலிருந்து கடைகளுக்கு விறியோகிக்க எடுக்கும் நாட்களும் கூட்டப்பட்டுள்ளது. இதனால் எவ்வளவோ விரையம் இப்போது குறைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது உதாரணமாக வட அமெரிக்காவில் இப்போது பெருமளவில் பயிரிடப்படும் பரம்பரையலகு மாற்றப்பட்ட சோளப் பயிரைக் குறிப்பிடலாம். நீண்ட காலமாக சோளப் பயிர்களுக்கிடையில் வளரும் களைகளைக் கொல்ல களை-கொல்லி மருந்து பாவிப்பதில் ஒரு சிக்கலிருந்து வந்தது. அது வென்னவென்றால் களைகொல்லி மருந்து சோளத்தையும் பாதிப்பதே யாகும். இக் களைகொல்லி மருந்துக்கு தாக்குப்பிடிக்கும் இயல்பைக் கட்டுப்படுத்துகின்ற பரம்பரையலகை விஞ்ஞானிகள் துல்லியமாக கண்டுபிடித்து அதை அம்மண்ணில் காணப்பட்ட ஒரு பற்றீரியாவின் பரம்பரையலகால் மாற்றீடு செய்து ஒரு புதுவின சோள வகையை உண்டு பண்ணினார்கள். இம்முயற்சி வெற்றியளித்ததால் இப்போது இப்புதியவகைச் சோளம் பெருமளவில் வடஅமெரிக்காவில் பயிரிடப்பட்டு முன்பிலும் பார்க்க அதிக இலாபம் ஈட்டப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகள் வடஅமெரிக்காவிலிருந்து வரும் புதிய சோளத்தையா அல்லது தென் அமெரிக்காவிலிருந்து வரும் இயற்கையான சோளத்தையா கொள்வனவு செய்வது என்ற சர்ச்சையில் இப்போது இறங்கியுள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட இரு புதிய வகைப் பயிர்களைப் போல் இப்போது பல வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அவையும் வெகுவிரைவில் சந்தைப் படுத்தப்படவிருக்கின்றன. இதனால் மேற்கு நாடுகளில் ஒரு பசுமைப் புரட்சியே தொடங்கிவிட்டதாகச் சிலர் விமர்சிக்கின்றனர்.

தமிழீழத்தில் காலங்காலமாகப் பயிரிடப்பட்டு வரும் பயிரினங்களில் பரம்பரையலகு மாற்றீடு செய்யும் தொழில் நுட்பத்தை நாமும் பாவித்து பெருமளவு பலனைப் பெறக்கூடிய சாத்தியங்களுண்டு. அவற்றில் சில வற்றை இங்கு குறிப்பிடலாம்.

1. நல்ல பலன் தரும் பழவகைகளை நல்ல வேர்விடும் தன்மை, வேர் நோய்களுக்கு எதிர்ப்புத்தன்மை, நல்ல வரட்சியைத் தாங்கும் தன்மை கொண்ட அதேயினத்தைச் சேர்ந்த மரங்களில் ஒட்டு வைத்து வளர்க்கும் முறை எமது பகுதிகளிலுண்டு. இம்முறையால் பெருமளவில் உற்பத்தி செய்யமுடியாமலுள்ளது. ஆனால் இதற்குக் காரணமாகவுள்ள பரம்பரையலகுகளை இனங்கண்டு மாற்றீடு செய்து உருவாக்கப்பட்ட விதைகளை விற்பதனால் பாரியளவில் பயிரிடலாம்.

2. நெல்லினங்களில் சில , சில நோய்களுக்கு எதிர்ப்புத்தன்மை கொண்டவை , அல்லது வரட்சியைத் தாங்கும் தன்மை கொண்டவை. ஆனால் அவற்றின் விளைச்சல் வீதம் குறைவு. இவற்றில் காணப்படும் அநுகூலமான இயல்புகளுக்குப் பொறுப்பான பரம்பரையலகுகளை இனங்கண்டு அவற்றை விளைச்சல் வீதம் கூடிய நெல்லினங்களின் பரம்பரையலகுகளுக்கு மாற்றீடு செய்து புதியவொரு நெல்லினத்தை அல்லது நெல்லினங்களை உருவாக்கி அதித விளைச்சலையும் இலாபத்தையும் ஈட்டலாம்.

3. எமது பகுதிகளிலிருந்து அறுவடை செய்யப்படும் பழவகைகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல கிராக்கியுண்டு. ஆனால் பழங்கள் சந்தையை அடையு முன்னரே அழுகி விடுகின்றபடியால் இவற்றைப் பெருமளவில் ஏற்றுமதி செய்ய முடியாமலுள்ளது. இக்கட்டுரையில் முன்பு குறிப்பிட்ட தக்காளி உதாரணத்தை நாமும் பாவித்து எமது பழவகைகளை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்து அதிக வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கலாமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்துறையில் எவ்வளவு தூரம் நாம் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றோமோ அவ்வளவு தூரம் பசுமைப்புரட்சியில் முன்னிலை வகிக்கலாம். ✳


# தளிர் மாலை 1997

தமிழ்ச் சிறார்களுக்கிடையே போட்டிகள்

பொது அறிவுப் போட்டி (General Knowledge)
பேச்சுப் போட்டி (Speech)
சித்திரப் போட்டி (Art)
மாதிரி அமைத்தல் (Model Making)
விநோதஉடைப் போட்டி (Fancy Dress)
இவற்றுடன்
தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையேயான கலை நிகழ்ச்சிப்போட்டிகள்

06 – 09 – .97 இல் உள்ளபடி
போட்டிகளுக்கான வயதுப் பிரிவுகள்

| | |
|---|---|
| Group A | 5 வயதுக்கு உட்பட்டவர்கள் |
| Group B | 5 – 7 வயதுக்கு இடைப்பட்டவர்கள் |
| Group C | 7 – 9 வயதுக்கு இடைப்பட்டவர்கள் |
| Group D | 9 – 12 வயதுக்கு இடைப்பட்டவர்கள் |
| Group E | 12 – 15 வயதுக்கு இடைப்பட்டவர்கள் |

இடம்
**Camden Centre**
**Behind Camden Town Hall**
**Bidborough Street**
**London WC1H 9JE**
Nearest underground: Kingscross, Euston

காலம்
**06 - 09 - 97**
**Saturday**
**5.00 pm - 10 pm.**

விண்ணப்ப முடிவுத் திகதி 31-7-97

விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
**0181 365 0249**
**or**
**0171 403 4554**
**after 9.pm 0181 503 3503**

தமிழீழ மண்ணின் வளங்களை, நல்முறையில் எவ்வாறு பயன் படுத்தலாம்,பேணலாம் என்பது சம்பந்தமாகவும், எமது மண்ணின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளியிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகட்கு: 0181 365 0249
**TEEDOR - UK**
**202 Eelam House**
**London SE1 4QB**

# தமிழீழப் பிரதேசமெங்கும் இராணுவத்தின் வெறியாட்டமும் தமிழ்மக்களின் இடம்பெயர்வும் இதனாலேற்படும் அல்லல்களும்

## கிரான் வாழ் மக்களுக்கு உணவு விநியோகம் தடை

வாழைச்சேனையில் உள்ள இராணு வம் கிழக்கிலங்கையில் கிரான் என்னும் இடத்தில் வாழும் மக்களுக்கு கும்புறுமூலை இராணு வத் தடைய ரணிஹடு அரிசி மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லத் தடை விதித்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் சொல்லொணாத்துன்பத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

## கிழக்கிலங்கையிலும் வன்னியிலும் இராணுவம் தமிழர்களின் பயிர்ச் செய்கை மீது காடைத்தனம்

தமிழர்களின் மிகக்கடுமையான உழைப்பின் விளைவால் நன்கு விளைந்த விளைநிலங்களின் மீது இராணு வம் தமது கவச வாகனங்களை ஏற்றிச் சேதப்படுத்தியதாகவும் சில இடங்களில் தீ வைத்துக் கொழுத்தியதாகவும் அறியப்படுகின்றது. திட்டமிட்ட முறையில் இராணு வம் நடாத்தும் இவ்வெறியாட்டத்தால் அங்குள்ள தமிழ் மக்களின் ஒரே நம்பிக்கையான பயிர்ச்செய்கையும் சேதப்படுத்தப்படுவதாக அறியப்படுகிறது.

## பலத்த குண்டு வீச்சால் தமிழ் மக்கள் திசை தெரியாது சிதறி ஓட்டம்

வவுனியா மன்னார் எல்லைப்புறங்களில் தமிழர்கள் செறிவாக வாழும் இடங்களின் மீது இராணு வம் திட்டமிட்டுக் குண்டுகளை வீசி வருவதால் மக்கள் எப்பக்கத்தால் சென்றால் தப்பலாம் எனத்தெரியாது சிதறி ஓடுவதாக அறியப்படுகிறது. எல்லாப் பக்கத்தாலும் சிதறி வரும் எறிகணைத் தாக்கு

தல்கள் மிகவும் பாரதூரமான முறையில் தமிழ் மக்களின் உயிர்களைக்குடிப்பதும், அங்கவீனர்கள் ஆக்குவதும் நடைமுறையாகி வருகிறது.

## எடிபல இராணுவ நடவடிக்கையால் வன்னி மக்கள் காட்டுப்பகுதியில் தஞ்சம்

எடிபல இராணு வ நடவடிக்கையின் விளைவால் வவுனியா, மதவாச்சி, மன்னார் பிரதான வீதிப்பகுதிகளில் இடைமறிக்கும் இராணு வத்தினரிடம் இருந்து தப்புவதற்காக மக்கள் காட்டுப் பகுதிகளில் தஞசமடைவதாக அறியப்படுகிறது.

## மடுவில் தமிழகதிகள் தொகை அதிகரிப்பு

சிறிலங்காவின் எடிபல இராணு வ நடவடிக்கைக-ளால் மடுவில் ஏற்கனவே தங்கியுள்ள 11 ஆயிரம் அகதிகளுடன் புதிதாக இடம் பெயர்ந்த 14 ஆயிரம் தமிழ்மக்கள் சேர்ந்ததால் இன்று 25 ஆயிரம் பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்திருப்பதாக அறியப்படுகிறது. இவர்களுக்கான உணவு, உடை உறையுள் பற்றாக்குறை பெருமளவு ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## 8 ஆயிரம் மக்களுக்கு உடனடி நிவாரணம் தேவை - மேலதிக அரச அதிபர்

சூரியகதிர், சத்ஜெய இராணு வ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து மன்னார் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் தேவை என மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் செஞ்சுடர் எழுச்சிக் கிராமம் திறந்து வைக்கப் பட்டது.

இக்கிராமத்தில் முதலுதவி நிலையம், தையல் வகுப்புக்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியனவும் அடுத்தடுத்துத் திறந்து வைக்கப்பட்டன.இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பலனடைந்துள்ளனர்.

## வன்னி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மாணவர் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

அரசபடைகளின் தாக்குதல்களால் வன்னி மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்த பெருந்தொகையான தமிழ் மாணவர்கள், தமக்கு இலவச சீருடை தர மறுப்பதையும், திட்டமிட்ட முறையில் தம்மீது குண்டுத்தாக்குதல்கள் நடாத்துவதையும், பரீட்சைகள் நடாத்த மறுப்பதையும் எதிர்த்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மகஜர்கள் கையளித்தனர்.

## முல்லை மாவட்டத்தில் தொடர்ந்து குடியிருப்புத் திட்டங்கள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முல்லை மாவட்டத்தில் மந்துவில் இரண்டாவது குடியிருப்புத் திட்டம், சிதம்பரம் குடியிருப்புத்திட்டம் போன்ற திட்டங்களை ஆரம்பித்துத் துரித கதியில் பல வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. நலன்புரி நிலையங்களில் இருக்கும் மக்கள் இந்த வீடுகளில் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். இதன் பின்னர் தனியார் வீடுகளில் இருந்து இன்னலும் மக்களும் இப்புதிய வீடுகளில் குடியமர்த்தப்படுகிறார்கள். சூரியகதிர் தாக்குதல்களால் வலிகாமம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வரும் அகதிகள் புதுக்குடியிருப்புப்

பிரதேசப் பிரிவில் புதுக்குடியிருப்புக் கிராமத் திட்டம் மூலம் குடியிருத்தப்படுகின்றனர்.

## அம்பலவன் பொக்கனை பிரதேசங்களின் குடியிருப்பு வசதிகள்

அம்பலவன் பொக்கனை பிரதேசங்களின் அன்பு குடியிருப்பு மூலம் பல தமிழ் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் அங்கு வரதன் பள்ளி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## வித்தியாபுரத்தில் பல முன்னெடுப்புக்கள்

வித்தியாபுரத்தில் வினோத் குடியிருப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதலில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அங்கு குடியமர்த்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அங்கு கப்டன் வினோத் முன் பள்ளியும், ஆரம்ப சுகாதார நிலையமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெருதும் நன்மையடைந்துள்ளனர்.

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு

**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்**

(பிரித்தானிய கிளை)

Registered Charity No: 1010029

79 Hoe Street, Walthamstow,
London E17 4SA

தொலைபேசி இல: 0181 - 520 5876

### தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| **TRO** Canada: | Ph: (1416)463 7647 |
| **TRO** Denmark: | Ph: (4520)23 88 97 |
| **TRO** France: | Ph((331 46) 489 850 |
| **TRO** Germany: | Ph: (4921) 665 8508 |
| **TRO** U.K.: | Ph: (44181) 520 5876 |
| **TRO** Italy: | Ph; (39 91) 611 3179 |
| **TRO** Malaysia: | Ph: 603 255 2472 |
| **TRO** Netherlanl | Ph: 31 72 644 442 |
| **TRO** New Zealand ; | Ph: (649) 537 0258 |
| **TRO** Norway: | Ph: (47 22) 646 592 |
| **TRO** South Africa: | Ph: (27 471) 310 123 |
| **TRO** Sweden: | Ph: (4686) 870 649 |
| **TRO** Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| **TRO** U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| **TRO** Australia: | Ph:Fax:(613) 9800 3899 |



05.05.97 திங்களன்று தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் சர்வதேச ரீதியில் லண்டனில் நடாத்தப்பட்ட வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களினதும், அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகளினதும் விபரங்கள் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

# உலக அரங்கு

## பிரித்தானியா

## பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தல் களம் தொழிற்கட்சி வரலாறு காணாத பெரும் வெற்றி

- நாவுக்கரசன் -

மாற்றங்களுக்கு உட்பட்டதுதான் அரசியல் – அரசியல் வாழ்க்கை. பிரித்தானிய மக்கள் மீண்டுமொருமுறை சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக தந்திரோபாயமான முறையில் தங்கள் தலைவர்களிடமிருந்து, தங்களையும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்வதற்கும் அரசியல் – சமூக – பொருளாதார நிலையை ஸ்திரமானதாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

இதன்படி, தேர்தல் தினமான மே மாதம் 1ஆம் திகதியை ஒரு அதிஸ்டமான நாள் என்று நம்பியது (ஒருவகையில் உண்மைதான்). "வரலாறு திரும்பத் திரும்ப வரும்" என்றபடி வழமைபோல் பழமைவாதக் கட்சியும் (Conservative Party) தொழிற் கட்சியும் (Labour Party) முறையே திரு. ஜோன் மேஜரையும் திரு. ரொனி பிளேயரையும் தலைவர்களாகக் கொண்டு தேர்தல் களத்தில் இறங்கின. ஒப்பீட்டு ரீதியில் சிறியதாக இருந்த 'லிபரல் டெமொகிரட்' கட்சியும் (Liberal Democrat Party) மற்றும் பெயரளவில் சில இதர கட்சிகளும் போட்டியிட்டன. இத்தேர்தலில் சுயேட்சையாக, ஈழத்தமிழரான திரு. கிருஷ்ணபிள்ளை வைகுந்தவாசன் என்பவரும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக ஆட்சியில் இருந்தபடியாலோ என்னவோ, பழமைவாதக் கட்சிக்குள் "அரசியலுக்குள் அரசியல்" ஆழமாகப் புரையோடியிருந்தது. தலைமைத்துவப் போட்டிகள், கட்சியுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழையாமை, தற்கொலைக்கு ஒத்த பிளவுகளை வளர்த்துக் கொண்டமை மற்றும் முக்கியமாக ஐரோப்பிய பொருளாதார இணைவில் "மதில் மேல் பூனை" போல் நடந்து கொண்டு பெரும் பொருளாதார அழிவை ஏற்படுத்தியமை, இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்ததுபோல் வடஅயர்லாந்து விடுதலைப் போராட்டத்தைச் சரியாகக் கையாளாமை – இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளால் புரையோடிப் போயிருந்து தன்னையும் அறியாமல் ஆட்சியில் இருந்தபடியே பழமைவாதக் கட்சி இறந்து கொண்டிருந்தது.

ஆனால் தொழிற்கட்சி, எதிர்கட்சியாக இருப்பதற்கே தகுதி என்ற முத்திரையை 18 வருட காலமாகக் கொண்டிருந்தாலும் ஆளும் கட்சியின் பலவீனங்களையும் பிரித்தானிய மக்களின் சலிப்பு நிலையையும் கணித ரீதியாகக் கணக்கிட்டு, அதற்கேற்ப திட்டங்களை அரசியல் முகாமைத்துவ அறிஞர்களின் ஆலோசனைகளின்படி வகுத்து, கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் திட்டமிட்ட முறையில் கடைப்பிடித்து, எல்லா இன மக்கள் வளங்களையும் – குறிப்பாக ஆபிரிக்க, ஆசிய மக்களை அனைவருடனும் இணைக்கத்தக்க வகையில் திரு. ரொனி பிளேயரின் தலைமையில் சந்தித்தது.

ஏற்கனவே இங்கிருந்த நிலைமைகள், தொழிற்கட்சியின் வெற்றியினையும் பழமைவாதக் கட்சியின் தோல்வியினையும் கணித்துக் கொள்ளக் கூடியதாகவே இருந்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் வரத்தொடங்கிய பின்னரேயே பழமைவாதக் கட்சி துடைத்தெறியப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது தெரிய வந்தது. சுமார் 165 ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறையே வரலாறு, இவ்வடிவில் ஓர் பெரிய வெற்றியைத் தொழிற்கட்சிக்கு ஏற்படுத்தியது. நாடு நகரமெங்கும் மே தினத்தையொத்த வகையில் சிவப்பு வர்ணக் கொடிகள் அலங்கரித்துக் கொண்டிருந்தது. மக்கள் அரசியல்வாதிகளை விட புத்திசாலிகள் என்பது அப்போதுதான் சிலருக்குப் புரிந்தது.



முன்னாள் பிரதமர்
ஜோன் மேஜர்

659 ஆசனங்கள் கொண்ட பிரித்தானியப் பாராளுமன்றத்தில், தொழிற்கட்சி மொத்தமாக 418 ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டது. இதில் 179 ஆசனங்கள் ஆட்சியமைக்க மேலதிகமானதாகும். பழமைவாதக் கட்சி 165 ஆசனங்களையே கைப்பற்ற முடிந்தது. ஏற்கெனவே கொண்டிருந்த ஆசனங்களில் 178 ஆசனங்களை இழந்து நின்றது. லிபரல் டெமொகிரட் கட்சி 46 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. வாக்காளர்களின் விழுக்காட்டில் அதிகரிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் பழமைவாதக் கட்சியின் வீழ்ச்சி, இக் கட்சிக்கு முன்னைய தேர்தலைவிடக் கூடிய ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ள உதவியது. மற்றைய கட்சிகள் 30 ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

இதில் வியப்புக்குரியது என்னவென்றால், பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த ஆறு மந்திரிசபை உறுப்பினர்கள் ஆட்சியை மட்டுமல்ல ஆசனங்களையே இழந்தனர். வெளி விவகார அமைச்சின் செயலர் திரு. மல்கம் றிப்கிண்ட் (Mr. Malcolm Rifkind), பாதுகாப்பு அமைச்சின் செயலர் திரு. மைக்கல் போட்டிலோ (Mr. Micheal Portillo), ஸ்கொட்லாந்து விவகார அமைச்சர் திரு. மைக்கல் போசே (Mr. Micheal Forsyth), வர்த்தக அமைச்சின் செயலர் திரு. இயன் லாங் (Mr.Ian Lang), பாராளுமன்றத் தலைவர் திரு. ரொனி நியூட்டன் (Mr. Tony Newton) நிதியமைச்சின் செயலர் திரு. வில்லியம் வால்கிறேவ் (Mr. William Walegrave) ஆகியோரே இவ்வாறு தமது ஆசனங்களை இழந்தவர்களாவர்.

பழமைவாதக் கட்சியின் அசைக்க முடியாத கோட்டைகள் என்று கருதப்பட்ட முக்கியமான இடங்கள் எல்லாம் தவிடுபொடியாகின. இலண்டனில் மட்டும் 20 ஆசனங்களை இழந்து நின்றது. திரு. ஜோன் மேஜர் தனது ஆசனத்தை தக்கவைத்துக் கொண்டார். தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டு இருக்கும்போதே இது பற்றி திரு. ஜோன் மேஜர் குறிப்பிடுகையில், "நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம். தேர்தலில் எப்போதும் வெற்றியடைபவர்களும் உண்டு, தோல்வி அடைபவர்களும் உண்டு" என்று தோல்வியை நாகரிகமாக ஒத்துக் கொண்டார். சிறிலங்காவைச் சேர்ந்த நிர்ஜி தேவா (ஜே.ஆரின் மருமகன் என்று சொல்லிக் கொள்பவர்) என்ற பௌத்த சிங்களவரும் பிரண்ட்போட் வடக்குத் தொகுதியின் பழமைவாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரும் இந்தக் காட்டாற்று வெள்ளத்தில் அடிபட்டுச் சென்றார். தொழிற்கட்சியில் இம்முறை ஆசியாவின், குறிப்பாக– இந்தியா, பாகிஸ்தானைச் சேர்ந்த 5 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரே முஸ்லிம் சமூகத்தில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார்.

பிரித்தானிய தேசியக் கட்சி (BNP) நிறக் கொள்கையையே பிரதான வேலைத் திட்டமாகக் கொண்டது. இத் தேர்தலில் 84 தொகுதிகளில் போட்டியிட்டது. ஒன்றுவிடாமல் யாவற்றிலும் மண் கவ்வியது. இதில் 4 பேர் மாத்திரமே கட்டுப்பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

வழமைக்கு மாறாக, முன்னெப் போதுமில்லாத வகையில் 116 பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர். 5 பேர் மந்திரிசபை என்றளவில் பதவிகளைப் பெற்றுள்ளனர். இதில் முழு இடதுசாரிக் கொள்கை கொண்ட பெண்மணி கிளயர் சோட் (Ms. Clair Short) என்பவர் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### பாராளுமன்றங்களின் தாய்க்கு ஒரு செய்தி

அதிகாரப் பரவலாக்கலை வாயளவுடன் வைத்துக் கொண்டிருந்த பழமைவாதக் கட்சியின் ஒரு தனி உறுப்பினர் கூட ஐக்கிய இராச்சியத்தின் பகுதிகளான வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்படவில்லை. இந் நிகழ்வானது, ஜனநாயகப் பாராளுமன்றங்களின் தாயான வெஸ்ட் மின்ஸ்ரர் (Westminster) பாராளுமன்றத்திற்கு மட்டுமன்றி, ஜனநாயகத்தின் பேரால் மிக மோசமான முறையில் ஆக்கிரமிப்புடன் மனித உரிமைகளை குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா போன்ற நாடுகளுக்கும் ஒரு தெளிவான செய்தியைச் சொல்லியுள்ளது. அது தன்னாட்சி பற்றிய அதிகாரம் – தன்நாடு பற்றிய அதிகாரம் என்பதே.

### அரசியல் வாழ்த்துக்கள்

வழமைபோல், பல நாட்டுத் தலைவர்களும் தமது வாழ்த்துக்களைப் புதிய அரசுக்கும் அதன் தலைவருக்கும் அனுப்பி வைத்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில், "தங்களது திறமையான வழிகாட்டலுடனும் முற்போக்கான தலைமைத்துவத்துடனும் உலகளாவிய வறுமை, இனரீதியான ஒடுக்குமுறை மற்றும் சமூக அநீதிகள் நீங்கிய புதிய இணக்கமான உலக ஒழுங்கின் உருவாக்கத்திற்கு பிரித்தானியா காத்திரமான பங்களிப்பு வழங்கும் என நம்புகிறோம்" எனத் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் திரு. குஜ்ரால் தனது வாழ்த்துச் செய்தியில், "புதிய பிரதமர், வெளிவிவகாரத்தைப் பொறுத்து பழைய அரசின் அரசியல் – பொருளாதார அணுகுமுறைகளைப் பின்பற்றுவார் என்று நம்புகின்றோம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.



புதிய பிரதமர்
ரோனி பிளேயர்

பிரித்தானிய மக்கள் வரலாற்றில் வரவிருக்கும் புதிய நூற்றாண்டை தங்களுக்கு மட்டுமன்றி, எதிர்காலச் சந்ததியினர் எதிர்கொள்ளத்தக்க முறையில் நாட்டைக் கட்டும் பொறுப்பை புதிய தொழிற்கட்சியிடம் ஒப்படைத்துள்ளனர்.



லிபரல் டெமொக்கிரட்
கட்சித் தலைவர்
படி ஆஸ்டவுன்

ஆனால் இத்தேர்தல் முடிவுகள், பிரித்தானியாவின் எதிர்கால அரசியல்–பொருளாதார–சமூகவாழ்வில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ✳



# உங்கள் சிந்தனையிலிருந்து...

## விடுதலைக்கு வரத்துடிக்கும் பிஞ்சுமனம்

களம் செல்லும் காலமில்லையடா இது- நீ
கண்ணாமூச்சி விளையாடும் நேரம்- உன்
காலம் வந்து காணும்வரை யில்லையடா விடுதலை- நீ
கலங்காமல் வாழ காண்போம் தமிழீழம்.

சங்கர் - சுவிஸ்

## விடிவிற்காய்........

மலரும் தமிழீழத்தில்
மன்னனாக நீயிருப்பாய் என்ற
மன நம்பிக்கையில்
மாமன் போருக்குப் போகிறேன்
மடிந்தால்
மண்டியிட்டுக் கொள்ளாதே
மாண்புடனே என்
ஆயுதம் தூக்கு.

சி. அன்புதாசன் - யேர்மனி

## சின்னப் பூவே!

சிரிப்பை மறந்த சின்னப் பூவே உன் வாழ்வில்
நெருப்பையள்ளிக் கொட்டியோர் நெஞ்சமில்லாதவரே,
தவிப்பை நாமறிவோம் தமிழ் மண்ணைக்காப்போமே!
கொதிப்பை மறந்து குளிர்தென்றலாய் வாராய்,
செஞ்சோலை நோக்கி சிறகடிக்க வாராய்,
பசுஞ்சோலை நீயே! பைந்தமிழும் நீயே!
பாசமுடன் மாமாக்கள் பரிவுடன்தான் ஏந்தியே,
நேசமுடன் வாழவைப்பார் நித்திலமே நீ வாராய்!

இ. சம்பந்தன் - யேர்மனி




## மண்ணை ஆளும் மன்னவனே!

குண்டுகொண்டு குடும்பத்தை
கூண்டோடு அழித்த 'கிபீரை'
கல்கொண்டு கலைத்து வந்தேன்
காணவில்லையே மாமா! காணவில்லையே!

தர்மத்தை உணர்ந்துவிட்டால் தானாக அழிந்துவிடும்
தவறிவந்தால் தலைவிதியை தானே நொந்துகொள்ளும்
தயங்காமல் ஓடிச்சென்று நாலெழுத்துப் படித்திடு
நாளை இந்த மண்ணை ஆளும் மன்னவனே!

நாவல் அருண் - யேர்மனி

ஆக்கங்களை அனுப்பிவைத்த அனைவரது விபரங்களையும் நன்றிகூர்தலோடு இங்கு பிரசுரிக்கின்றோம்.

ச. மணிவண்ணன் – சுவிஸ், ச. இராசகுமார் – யேர்மனி, சாந்தி ஆனந்தன் – டென்மார்க், இ. துஷிதா – யேர்மனி, T. T. நேசன், கிருபா – யேர்மனி, க. ரகு, சித்திரா சுதாகரன் – யேர்மனி, வீ. யுவராஜ் – யேர்மனி, கந்தையா சிவநேசன் – சுவிஸ், அமலா ஜெயந்தன் – யேர்மனி, எஸ். எஸ். பிள்ளை – யேர்மனி, எம். ஈஸ்வரன் – பிரான்ஸ், ச. ஜெகநாதன் டேறா – இலண்டன், ஜெ. பு. நாதன் – இலண்டன், த. உதயகுமார் – யேர்மனி, அ. விக்டர் – யேர்மனி, ம. தேவன்ரவி – யேர்மனி, விஜிதா சச்சிதானந்ததாசன் – யேர்மனி, கு. வாசவன் – யேர்மனி, கணபதி தவக்குமார் – சுவிஸ், மு. வினிதன் – பிரான்ஸ், கா. தியாகராஜா – யேர்மனி, சுகந்தி தமிழ்வாணன் – பிரித்தானியா, ஈழத்தீசன் – யேர்மனி, தமிழீழன் – யேர்மனி, சங்கையூர் குமார் – சுவிஸ், எம். சிவா – இலண்டன்.

# வாசகர் கடிதம்

## அன்புடன் களத்தில் ஆசிரியர் அவர்கட்கு,

புலம் பெயரிடந்தனில் புலிகளின் குரலென
களமது வருவது கண்டே களிப்புறுகின்றேன்
களத்தினில் செய்திகள் கண்டு உளத்தினில்
விடுதலை உணர்வுகள் பொங்குது – உடன்
வீர உதிரமும் துடிக்குது, தீர உறுதியும் பிறக்குது
படித்திடுவோர் தம் ஆக்கம் படைத்திட
பக்கம் ஒன்றை வாசகர் கொதுக்கிடல் கண்டே
உளம்மிக மகிழ்ந்து களம்தனை வாழ்த்துகின்றேன்.

- வட்டூர் தி. சிவபாலன் (யேர்மனி) -

## என்னுளத்தில் களத்தில்........

ஈழமண் வாசனையை
ஈழத்தமிழர் வேதனையை
ஆழமாக ஊடுருவி
அனைவருமே அறியும் வண்ணம்
உலகமெலாம் செல்லுகின்ற
களத்தில் காற்றே – நீ,
காலந்தோறும் வீசவேண்டும்!

பாரதிதாசன் – யேர்மனி

## தமிழர் புனர்வாழ்வுக் கழக (யேர்மனிக் கிளை) நடாத்திய நாடகவேளை

(20-4-97) ஞாயிற்றுக்கிழமை யேர்மனியின் டோட்முன்ட் நகரின் போர்சிக்பிளட்ஸ் மண்டபத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளையால் ஒழுங்கு செய்யப்பட்ட நாடகவேளை பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமாகியது. பாண்டிச் சேரியிலிருந்து வருகை தந்திருந்த பல்கலைக்கழக நாடகக் கலைஞர்கள் இதனை நடாத்தினர். தலைக்கோல் – பாண்டிச்சேரி என்ற நாடக அமைப்பை உருவாக்கி மரபு நாடகங்களையும் நவீன நாடகங்களையும் வழங்கிவரும் இந்தக் கலைஞர்கள் உலகின் பல பாகங்களில் இவர்களது படைப்பான 'கருஞ்சுழி' என்ற நவீன நாடகத்தை மேடையேற்றி உள்ளனர்.

முதல் நாடகமாக 'திரௌபதை துகிலுரிதல்' என்ற மரபு நாடகத்தையும் இரண்டாவது நாடகமாக 'கருஞ்சுழி' நாடகத்தையும் வழங்கினர். 'கருஞ்சுழி' பல தளங்களில் தனது கருத்தை முன்வைத்து மனித நேயத்தையும் அழிவை நோக்கிய அறிவின் விகாரத் தையும் வெளிப்படுத்தியிரு ந்தது. மேடையின் நீள – அகல –உயரம் அனைத்தையும் பயன்படுத்தி அலைகளையும் மலைகளையும் கற்பாறைகளின் நகரினையும் இசை – ஒளி ஆகியவற்றின் துணையுடன் காட்டி அரங்கக் கலையில் சிறப்பான படைப்பாக இது விளங்கியது. சடப்பொருளினூடும் உயர்வாக உணர்வுகளையும் கருத்துக்களையும் வெளிப் படுத்தலாம் என்பதில் இந்தக் கலைஞர்கள் வெற்றி கண்டு ள்ளனர்.

கதைத் தளமும் கதை வசனமும் தேவைப்படும்போது மட்டுமே வெளிப்பட்டு நிற்கும் சிக்கனம் அழகைக் கொடுத்தது. கருத்துக்கள் நடிப்பினூடு வெளிப்பட எடுத்த யுக்திகள் சிறப்பானவை.

கலைஞர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக்கிளைப் பொறுப் பாளர் ஆனந்தராஜா அவர்கள் மலர்ச் செண்டு வழங்கிக் கௌரவித்தார். செல்வி பவுத்திரா செல்லகாந்தனின் கரும்புலி நடனத்துடன் நாடக விழா முடிவுற்றது. ✷

# இலண்டனில் செஞ்சோலை கலைமாலை-97

12-04-97 சனிக்கிழமையன்று, இலண்டன் ரூட்டிங் பகுதியில் 'செஞ்சோலைக் கலைமாலை' வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்விழாவில் வரவேற்புரை வழங்கிய டாக்டர் சத்தியமூர்த்தி அவர்கள் தனதுரையில், வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தமது குடும்பங்களுடன் தொடர்பாக நடாத்தும் பிறந்த நாள் போன்ற விசேட நிகழ்வுகளுக்குரிய ஆடம்பரச் செலவுகளை இயன்றளவில் குறைத்து, செஞ்சோலைப் பிள்ளைகளின் பராமரிப்புக்கு அதைக் கொடுத்து உதவ வேண்டு மெனக் கேட்டுக்கொண்டார். லண்டன் வோல்தம்ஸ்ரோவில் வாழும் சிறீதரன்–இராசேஸ்வரி தம்பதிகள் தமது மகனின் பிறந்த நாள்(12.04.96) நினை வாக, இவ்விழாவில் வைத்து செஞ்சோலைக் காப்பகத்திற்காக வழங்கிய நிதியை முன்னு தாரணமாகக் குறிப்பிட்டுப் பேசிய டாக்டர் சத்தியமூர்த்தி அவர்கள், இம்முன்மாதிரியை லண்டனில் உள்ள எல்லாத் தமிழர்களும் பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இச் செஞ்சோலைப் பூந்தளிர்களின் காப்பக நிதிக்காக, செஞ்சோலை பிரித்தானியக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சியில், புலம் பெயர் வாழ் தமிழ் சிறுவர்கள் பலர் பங்கெடுத்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

நடனம், கவியுரை, பேச்சு, பெற்றனர். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற சமூக நாடகம் ஒன்றும் மேடை யேற்றப்பட்டது. இந்நாடகம், தமிழீழ மக்களின் இடம்பெயர்வு பற்றிய அவலங்களையும் அவர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையையும் வெளிப்படுத்தியது.



பாட்டு, நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெற்றன. நடனம், கவிதை, பேச்சு ஆகிய நிகழ்வுகளில் சிறுவர்கள் திறமையாகப் பங்கெடுத்து பார் வையாளர்களின் கரகோசத்தைப் 500க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் சேகரிக்கப்பட்ட நிதி, செஞ்சோலைக் காப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளது. ✷

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துயர் துடைப்பு நாட்கள் ஜுலை 05 முதல் 13 வரை

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் தமது சொந்த வாழ்விடங்களைவிட்டு ஏதிலிகளாகிய எமது மக்களின் துயர் துடைக்க வெளிநாடுகளில் வாழும் நாம் எம்மாலான அதிகூடிய மனிதாபிமான ரீதியான பங்களிப்பைச் செய்ய முன்வரவேண்டும். தமிழீழத்தில் இடம்பெயர்ந்து இருக்க இடமின்றி, உண்ண போதிய உணவின்றி, உடுக்க உடையின்றி, மருத்துவ வசதிகள் இன்றி அல்லலுறும் எம்மக்களுக்கு நாம் உடனடியாக உதவிகள் செய்ய வேண்டியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஜுலை மாதம் 5ம் திகதிக்கும் 13ம் திகதிக்கும் இடையிலான நாட்களை துயர் துடைப்பு நாட்கள் என பிரகடனம் செய்து நிதி சேகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்வில் சகல தமிழீழ மக்களும் சகல வேறுபாடுகளையும் மறந்துவிட்டு பங்கேற்றுக் கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது.

சுமார் 8 இலட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி தற்காலிகமான இடங்களில் வசித்து வருகிறார்கள். சிறிலங்கா அரசும், இராணுவமும் மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையினாலும், நிவாரணங்கள் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளினாலும், இடம் பெயர்ந்த மக்கள் எந்தவித உதவிகளும் இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுமார் 3 லட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்கிறோம். எமக்கிடையே நிதியைத் திரட்டி தமிழீழத்தில் இடம்பெயர்ந்து அல்லலுறும் எம் மக்களின் துயர் துடைப்போம்.

**தாயகத்தில் அல்லலுறும் மக்களின் துயர் துடைக்கும் இப்பணியில் இணைந்து செயலாற்ற விரும்பும் மனிதாபிமானம் கொண்ட தமிழ் நெஞ்சங்களை அவ்வவ் நாடுகளிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளும்படி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டி நிற்கின்றது.**



மருத்துவ நிதிக்காக நடைபெற்ற கலை நிகழ்வில் விடுதலைப்புலிகளின் ஜேர்மன் கலை பண்பாட்டுக்கழக மாணவிகளின் 'மண்ணில் ஒரு பிடி' நிகழ்ச்சி – ஆசிரியை செல்வி தேனுகா காந்தராஜா – சுவிஸ்



30 . 03 . 97 இல் சுவிஸ் சூரிச்சில் விடுதலைப்புலிகள் சுவிஸ் கிளை மகளிர் அணியினரால் நடாத்தப்பட்ட கலைநிகழ்வின் ஒரு நடன நிகழ்ச்சி (விடுதலை வேள்வி) ஆசிரிகைகள் – விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக ஜேர்மன் கிளையினரின் ஆசிரியைகள் திருமதி. சாவித்திரி இம்மானுவேல், செல்வி தேனுகா காந்தராஜாவும் அவர்களது மாணவிகளும்.





# எரிகின்ற எம்தேசம் ஒரு நாள் விடியும் !

**விழிகள்** நீர் சொரிய, வீதி வழி பெருகி துயரச் சுமையுடன் தூரம் நடந்தோம். விண்ணும் மண்ணும் வீசும் அனல் காற்றும் சாட்சி சொல்ல, நாம் நேற்றிருந்த தாய் நிலத்தை, கொலுவிருந்த கோமிலை, கூடிக்கழித்திருந்த அற்புதத்தை விட்டொருநாள் வீதி வழி வந்தோம். கொட்டும் மழையிலும் கொதிக்கும் வெய்யிலிலும் பட்ட மரமாயும், பால் வடியும் தளிராயும் வெட்டித் தறித்திடவும் வேரோடு சாய்த்திடவும் வந்தபகை விரட்ட ஓடோடி வந்தோம். சொத்து இழந்து, சுகமிழந்து, சொந்த பந்த உறவு இழந்து கத்தித் தொலைத்தாலும் கலையாத துயரத்தில் கண் வழிந்த நீருடனே கடல் கடந்தோம்.

**காலம் எமக்கிட்ட விதி இதுவோ!**
**காலை ஒருநாள் கண் மலராதோ!**
**விடியும் திசை நோக்கி விடிவெள்ளி பூக்காதோ!**

தடை உடையும், சுமை அழுத்த, துயர் வருத்த ஓடோடி வாழும் வாழ்வு ஒரு நாள் அழியும். ஏதுமற்று நின்றாலும் எம் நாட்டில் ஏதிலியாய் இல்லாத, ஈனக் கொலை புரிய எவ்வாறு வந்தாலும் பகைச் சிறைக்குள் இல்லாத வாழ்வு இருந்தால் அது போதும். தூரப் பயணிக்கும் விடுதலைப் பயணத்தில் துயர் சுமந்த மனிதர் எனும் பெயர் சுமந்த **பேறு** எமக்கு. வீரம் விளைகின்ற பூமி இது. யாரினதும் காலடியில் பணியாது. கைகட்டி வாழாது. நில்லென்று எமையாரும் நிறுத்தி வைக்க முடியாது. கொல்லட்டும், பல நூறாய் குண்டு அள்ளிக் கொட்டட்டும். தங்கள் மங்கின்ற வெற்றியுடன் மார்தட்டிக் கொள்ளட்டும். குண்டு மழை பொழிந்து குருதி கொப்பளிக்க, வஞ்சம் தீர்க்க வரும் வெஞ்சினத்தோர் பதில் தருவார். வானம் மழை பொழியாக் கண்மழையில் எமைக்குளிக்க வைத்தோருக்கு விடை தருவார். புயலாகி எம்மண்ணின் மடிபிறந்த மைந்தர்கள், ஒருநாள் துயர் எரிப்பார். தூரஞ் சுருக்க வழி வந்த தடை உடைக்க ஆயிரம் ஆயிரமாய் கறுப்பாகி உடல் தெறிப்பார். இது இடிதாங்கிய நிலம். பிரபாகரன் என்ற பெரு விருட்ச நிழலினிலே துயர் ஆறும் எம்மினம். வற்றாத ஓர் வாழ்வும் வழுவாத எம்நெறியும் விலைபோக முடியாத எம்வீரமும் வெற்றி கொண்டுவரும். எரிகின்ற எம்தேசம் வாழ்த்திசைக்க ஒருநாள் விடியும். குனிந்த தலை நிமிர்த்தி குவலயத்தில் தமிழ் மானம் உயர வைக்க எழுந்த இந்த வரலாறு வெல்லும்!



